# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

22 டிசெம்பர் 2018

புதுமை : 03 விதி : 133


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'






காப்பாற்றப்பட்ட ஜனநாயகம் கைவிடப்பட்ட தமிழர்கள்



ஒரு விரல் புரட்சியும் அரசியல் குழப்பமும்



திருக்குறளை வள்ளுவர் எழுதவில்லை...?



கேட்கிறதா...? துண்டாடப்படும் கிராமத்தின் குரல்



ஈழப் போரில் காணாமல் போன கணவனைத் தேடி தமிழ்நாட்டுக்கு செல்லும் பெண்ணின் கதையாக உருவாகிறது ஒரு படம்.

இந்தப் படத்தின் நாயகியாக சோனியா அகர்வால் நடிக்கிறார். நாயகன் இல்லை. கஞ்சா கருப்பு, மோகன்ராம் ஆகியோர் நடிக்க, எஸ். சிவராமன் இயக்குகிறார்.



'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' படத்தில் விஜய் சேதுபதி ஜோடியாக நடித்தவர் காயத்ரி.

விஜய் சேதுபதியுடன் ரம்மி, புரியாத புதிர் என 6 படங்களில் நடித்தவர் வேறு சில படங்களிலும் நடித்தார். ஆனால் அவருக்கு சரியான வாய்ப்புகள் அமையவில்லை.

எனினும் 7 ஆவது முறையாக விஜய் சேதுபதியுடன் மாமனிதன் படத்தில் நடிக்கவுள்ளார்.

'இமைக்கா நொடிகள்' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் ராஷி கண்ணா. தெலுங்கின் முன்னணி நடிகையான இவர் தற்போது ஜெயம் ரவியுடன் 'அடங்க மறு', விஷாலுடன் 'அயோக்யா' படங்களில் நடிக்கிறார்.

அவரின் நேர ஒழுங்கு, படங்களில் கொள்ளும் அக்கறை என்பவற்றால் அவருக்கு இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மத்தியில் நல்ல பெயர் ஏற்பட்டுள்ளது.





பா.இரஞ்சித் தயாரிக்கும் 'இரண்டாம் உலகப் போரின் கடைசி குண்டு' படத்தில் 'அட்டக்கத்தி' தினேஷ் நாயகனாக நடிக்கிறார்.

இதில், ரித்விகா முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.





புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 22 டிசெம்பர் 2018 விதி : 133

# வரலாற்றுக் காலத்தை விட இலங்கைக்கு ஆபத்து அதிகரிப்பு

## ஜனாதிபதி எச்சரிக்கை

வெளிநாடுகளின் படையெடுப்புகள் இடம்பெற்ற வரலாற்றுக் காலத்தை விடத் தற்சமயம் வெளிநாடுகளின் ஆதிக்கம் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அரச பணியாளர்கள் விழிப்புடன் செயற்பட்டு தாய்நாட்டின் சுயாதிக்கத்தைப் பாதுகாக்க வேண்டுமென தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக் கொண்ட இராணுவத்தினரின் பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் பின்பு இலங்கையின் பொருளாதாரம் வெளிநாடுகளின் நாணயக் கயிற்றில் பிணைக்கப்பட்டு விட்டது. இதைப் பறித்துச் சீனாவின் கைகளில் கொடுக்க முன்னாள் ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டாலும் அதில் முழுமையாக வெற்றி பெற முடியாத நிலையில் ஒருபுறம் மேற்குலகத்தாலும் மறுபுறம் சீனாவாலும் இலங்கை ஆட்டி வைக்கப்படுமளவுக்கு இலங்கையில் சுயாதீனம் பகுதி பகுதியாக அடகு வைக்கப்பட்டு விட்டது.

2015 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேன மஹிந்தவுடன் போட்டியிட்டபோது மைத்திரியை வெற்றி பெற வைக்க இந்தியாவும் மேற்குலகமும் காய்களை நகர்த்தியபோது இவர் வெளிநாட்டுத் தலையீடு பற்றி எச்சரிக்கை செய்யவில்லை. 2009 ஆம் ஆண்டில் இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட வெளிநாடுகளின் உதவியுடன் அதைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடித்தபோது வெளிநாடுகளின் தலையீடு கசக்கவில்லை. ஆனால் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச நிபுணர்கள் பங்களிப்புக் கோரப்பட்டபோது மட்டும் இலங்கையின் சுயாதீனம் பற்றி அலறுகின்றனர்.

அதாவது தங்களுக்குச் சாதகமாக அமையும்போது வெளிநாடுகளின் தலையீடு வரவேற்கப்படுவதும், தமக்குப் பாதகமாக அமையும்போது அதைப் பெரும் பூதாகாரமாகக் காட்டி அச்சுறுத்துவது இலங்கையின் அரசியல்வாதிகளின் ஒட்டு மொத்த குணமாகும். ஆனால் ஜனாதிபதி இதைப் படையினர் மத்தியில் வெளியிட்டதன் மூலம் ஏதோ ஒரு வெளிநாட்டு சக்திக்கு எதிராகப் போருக்கு அறைகூவல் விடுக்கிறாரோ என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது.


**தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்னுமாம்**

# இருபது சுதந்திரக் கட்சியினரை அரசாங்கத்தில் இணைக்கத் திட்டம்

## கூட்டமைப்பின் பலத்தை உடைக்கும் சதி

மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து அவர்களுக்கு முக்கிய அமைச்சுகளைப் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் எனவும் இது தொடர்பாக சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் இருந்து சில தகவல்கள் கசிந்துள்ளன.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 106



ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 103 ஆசனங்களும் உள்ள நிலையில் நாடாளுமன்ற அரசாங்கம் எந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவை. இப்படியான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் நிலை உருவாவதைத் தவிர்க்கவே இத்தகைய திட்டம் வகிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே சில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ரணிலுக்கு மறைமுகமான ஆதரவை வழங்கி வந்ததாகவும் தெரிய வருகின்றது. இந்த இணைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கும் சக்தியாக செயற்படுவதைத் தடுப்பதற்காக மட்டுமே எனவும் அக்குழுவினர் மஹிந்த மைத்திரி ஆகியோரின் கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படுவர் எனவும் தெரிய வருகின்றது.

**அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தியே புறத்திதான்**

# பறிக்கப்பட்ட பதவியும் உருட்டப்படும் சட்டமும்

ஐம்பத்திரண்டு நாட்களாக நாட்டின் பிரதமர் ரணில் விக்கிமசிங்கவா அல்லது மஹிந்த ராஜபக்ஷவா என நாடாளுமன்றம், நீதிமன்றம் ஊடகங்கள், வீதி ஆரப்பாட்டங்கள் எனப் பல்வேறு முனைகளிலும் இடம்பெற்ற மோதல்கள் ஒருவாறு முடிவுக்கு வந்து மீண்டும் நாடாளுமன்றம் ரணிலைப் பிரதமராகக் கொண்டு 18, 19 ஆம் நாள்களில் கூடியது.


முதல் அமர்விலேயே கடந்த மூன்றரை வருடங்களாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் எதிர்கட்சித் தலைவர் பதவி பறிக்கப்பட்டு அந்த இடத்திற்கு மஹிந்த ராஜபக்ஷ சபாநாயகரால் நியமிக்கப்பட்டார்.


எதிர்கட்சித் தலைவராக இருந்தபோதும் அரசாங்கத்துக்கு எல்லா விதத்திலும் ஆதரவளித்தவர் என்ற வகையில் அப்பதவி இல்லாமல் போவதால் தமிழ் மக்களுக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கையின் பிரபல சட்டவல்லுநர்களில் ஒருவருமான சுமந்திரன், மஹிந்த எதிர்கட்சித் தலைவராகப் பதவி வகிக்க முடியாதென ஆணித்தரமான வாதத்தை முன்வைத்தார். அவர் சட்டங்களைப் போட்டு உருட்டிய உருட்டலில் சபாநாயகர் அதுபற்றி ஆராய ஒரு குழுவைநியமிக்க ஒப்புக்கொண்டுவிட்டார்.

ஏற்கனவே அரசியலமைப்பு வரைபில் உள்ள 'ஒரே நாடு', "ஒருமித்த நாடு" என சிங்களத்திலும் தமிழிலும் வெவ்வேறு அர்த்தங்கள் வெளிப்படும் வகையில் அமைந்திருந்தபோது அது ஒருமித்த நாடுதான் எனத் தனது திறமையால் வாதிட்டவர் சுமந்திரன் என்பதை மறந்துவிட முடியாது. ஆனால் தற்சமயம் ரணில் மீண்டும் பதவியேற்ற போது ஒரே நாட்டுக்குள் இனப் பிரச்சினைத் தீர்வை எட்டப்போவதாகக் கூறியபோது அவர் ஏன் அதை மறுக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

**சட்டத்தின் பின்னால் நின்று சதிராடும் கூட்டம் இப்போது தெரியாது எதிர்காலம் காட்டும்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்
























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துங்கள்

மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதுடன், புதிய அமைச்சரவையும் பதவியேற்றுள்ளது. ஆனால் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் அதிகார மோதல்கள் நிகழ்ந்து கொண்டேதான் உள்ளன. பிரதமர் பதவியில் தொடங்கிய ரணில் - மஹிந்த மோதல் இப்போது சம்பந்தன் - மஹிந்த என எதிர்கட்சித் தலைவர் பதவியில் வந்து நிற்கிறது.

அரசியல் குழப்பத்துக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் - அமைச்சர்களுடன் வடக்கு அபிவிருத்தி குறித்து மோதல் நிலைமைகள் நீடித்து வந்தன. இதனால் இம்முறை வடக்கு - கிழக்கு தொடர்பான முக்கிய அமைச்சுகள் பிரதமர் வசமே உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போதுமான அபிவிருத்திகளை வடக்கு - கிழக்கில் முன்னெடுக்க முடியும்.

தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய ஒருபோதும் அமைந்ததில்லை. 2015 தொடக்கம் இதேநிலைதான் தொடர்கிறது. இப்போது 2019 பெப்ரவரி என்பதாக வாக்குறுதி நாள் நீண்டிருக்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தைக் காரணம் காட்டி அபிவிருத்தியையும் பிற்போட்டு விடாமல் பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்கி வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம் ஆகியவற்றில் முக்கிய பங்காற்ற வேண்டும்.

வடக்கு மாகாண ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் இருந்த வரை மக்களின் பிரச்சினைகள் - அடிப்படைத் தேவைகள் சில பூர்த்தி செய்யப்பட்டன. வடக்கு மாகாண சபையின் ஆட்சி நிறைவுக்கு வந்த பின்னர் மக்களின் கண்ணீரைத் துடைக்க எந்த மக்கள் பிரதிநிதியும் தயாராகவில்லை. அரசியல் குழப்பத்தைக் கண்காணிப்பதும் - நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதும் மட்டுமே தம்முடைய கடமையாக எண்ணிச் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையை மாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் முன்வரவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கொடுக்கும் அதேயளவு முக்கியத்துவம் அபிவிருத்திப் பணிகளுக்கும் கொடுக்கவேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்டு - இன்னமும் ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் செய்யும் உண்மையான சேவை இதுவாகவே இருக்கும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 32

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

காயமடைந்ததைக் கூறினாள். மனம் கேட்காமல் 'கோபிக்காத வந்திரன் என்னோட" எனக் கேட்டேன். 'இல்லையம்மா. நிலைமை இன்னும் மோசமா போகுமாப் போல இருக்கு. சுதந்திரபுரப் பக்கமா போயிரு. பிள்ளைகள் கவனம். யார் யார் இருப்பமோ தெரியேல்ல. அக்காவை மறந்திடாதே." என்றாள். நான் வாயை மூடி அழுதேன்.

'என்ன வாங்கித்தர" என்று கேட்டேன்.

'வெற்றிலை சீவல் வாங்கித் தாம்மா" என்றாள்.

நிமிர்ந்து கண்களால் கேள்வி கேட்டேன்.

'சமைக்கிற அம்மாவுக்கடா. அம்மாவைப்போல நல்லவா" என்றாள். அவளுடைய அழகான முகத்தில் அந்தக் கண்கள் துயரத்தைச் சுமந்த நீர்க்கோலத்தை வரைய முடியாமல் வெளியேறியது.

ஓட்டமும் நடையுமாக வெற்றிலை வாங்கிக் கொடுத்து, விடைபெற்றேன். அன்று கண்டவளை இன்றுவரை தேடுகிறேன். காணவில்லை.

போர் தின்ற காலப் பசிக்கு இரையாகிப்போன குடும்பங்களில் என் பெரியம்மாவின் குடும்பமும் ஒன்றாகியது.

இந்த மனம் எத்தனை துயரம் சுமந்தாலும் தேடல்களை விட்டு விலகுவதில்லை. ஆசைகளைத் தேடுவதில்தான் எத்தனை வகைப்பாடு நிரம்பி வழிகிறது. இப்போதெல்லாம் காலத்தின் துயரத்தை நிரப்பும் மனதுக்கும் மூளைக்கும் நிரம்பி வழிதலே இல்லாமல் துயரங்கள் சுரங்கம்போல நீட்சியாகவும் மலைப்பாம்பு போல வளைந்தும் நெளிந்தும் உடலுக்குள் அல்லவா தேங்கிக் கிடக்கிறது. அலைதள்ளிய நுரைபோல ஓங்கிப் பிரவாகிக்கும் கண்ணீரோடு கரைந்து போகக்கூடிய துயரமாக இருந்தால் கரைத்து விடலாமே. உயிரோடும் நினைவுக் கலங்களோடும் நிறைந்து போன துயர வெம்மைக்குள் எத்தனை முகங்களைத்தான் நான் ஏக்கத்தோடு தேடுவது?

மீண்டும் முள்கம்பி வேலியை அடைந்து சரணடையும் போராளிகளுக்குள் எனக்குத் தெரிந்த முகங்களைத் தேடுகிறேன். பயங்கரவாதிகள் என்று திட்ட மிட்ட ஒரு சொல்லாடலால் விகாரப்படுத்தப்படும் விடுதலைப் புலிகளின் உள்ளத்தை நான் என் சிறு பராயத்தில் இருந்து அறிவேன். கழுத்தில் நஞ்சுக் குப்பியுடனும் கரத்தில் ஆயுதத்தையும் உடம்போடு கவசம் போல ஒட்டிக்கிடக்கும் தோட்டாக்களும் கைக்குண்டுகளும் பொருத்திய மிடுக்குக்குள்ளும் இளகிய இதயமும் தசையையும் கொண்ட தெய்வ மனங்களே இருந்தன.

சித்தி, பெரியம்மா, மாமா, அத்தை என அழைத்த போதெல்லாம் பெரிய மனுசிகள், மனுசன்கள் போல அந்த உறவுநிலையைத் தந்தவர்களுக்கு இருபது கடக்காத வயதும் இறுக்கமான உறவுப் பிணைப்பையும் தரும் மனதும் இருந்தன. எந்தப் படையணியைச் சேர்ந்த போராளிகளும் செஞ்சோலை என்ற எங்கள் வீட்டுக்கு வராமல் இருந்ததில்லை. அது படையணிப் போராளிகளாக இருந்தாலும் சரி, அரசியல்துறை, கடற்புலிகள், நிதர்சனம் என அனைத்து துறையிலும் இருந்த பலரை நாம் தெரிந்து வைத்திருந்தோம். அப்படி ஒரு நெருக்கம் செஞ்சோலைக்கும் போராளிகளுக்கும் இடையில் இருந்தது. அதைவிட போராளிகள் செஞ்சோலை நிகழ்வுகள் என்றால் விரும்பி வர இன்னொரு பிரதான காரணம் பெரும்பெரும் தளபதிகளோடு தங்கள் தேசியத் தலைவரும் செஞ்சோலைப் பிள்ளைகளின் அன்பில் உயர்ந்த மாமனையும் அங்கு சந்திக்க முடியும் என்ற எண்ணமும்.

ஒரு பயங்கரவாத இயக்கமாக சித்திரிக்கப்படும் விடுதலைப் புலிகளின் தலைவன் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளின் மாமானாக இருந்த கதையை உலகம் எந்தப் பயங்கரவாதமாக வகுத்துத் தொகுக்குமோ? ஆயுதம் ஏந்திய பயங்கரவாத வெறியர்களாக இருந்தால் குழந்தைப் போராளிகளைத்தானே உருவாக்கியிருப்பர். இப்படி அன்பைப் பொழிந்து வளர்த்திருக்க முடியுமா?


காணாத பூதத்துக்கு கொம்பும் பல்லும் வைத்து உருவகிப்பது போன்றதே விடுதலைப் புலிகளோடு சேராத, பார்க்காத பந்தமும் ஊகங்களும். மனது களைத்திருந்தது. கண்கள் சுட்டி விளக்குக்குள் எரியும் தீபமாக ஒளியேற்றி காணத்துடித்த முகங்களைத் தேடியது. ஜனனிப் பெரியம்மா, மலைமகள் சித்தி, கஜானி சித்தி எனக்கு எத்தனை உறவுகள் இந்த உலகத்திலே. யாரை நினைப்பேன்? எல்லோரது பெயரையும் குறிப்பிட்டுக்கூறத்தான் முடியுமா? தேடுகிறேன்.

நானாக விரும்பி அம்மா என அழைத்தபோது ஒரு தலையசைப்புடனும் புன்னகையோடும் அங்கீகரித்த வெற்றிச்செல்வியை தேடுகிறேன். பாதரோடு சரணடைந்த போராளித் தளபதிகள் அங்கிருப்பதைக் காண்கின்றேன். சில பெண் போராளிகள் தங்கள் குழந்தைகளோடு சரணடைந்திருந்தார்கள். 'அது பாலகுமார் அண்ணா, அது எழிலன் அண்ணா என பொறுப்பாளர்களை இனங்கண்டு மக்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். தமிழினி என்ற பெயரை தந்திரமாக அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அங்கு அவரைக் காணவில்லை. உயரமும் பருமனுமான தளபதிக்குரிய வீர மிடுக்குமுடைய தமிழினியின் சாயலில்கூட அங்கு யாருமில்லை. நயவஞ்சக எண்ணத்தோடு அறிவிப்பை இராணுவம் அறிவிப்பது புரிந்தது. போராளிகள் சரணடைந்த அந்தப் பனையடியிடத்தில் ஹிப்பியாக முடியை வெட்டியிருக்கும் அந்தப் போராளி கஜானி சித்தியாக இருக்குமோ? (சாட்சியம் நீளும்)

# காப்பாற்றப்பட்ட ஜனநாயகமும் கைவிடப்பட்ட தமிழ் மக்களும்

■ யோகநாராயணன்



கடந்த ஒக்ரோபர் 20 ஆம் நாள் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கி மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்ததன் காரணமாக ஆரம்பமான அரசியல் குழப்பம் கடந்த 14 ஆம் நாள் "நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை செல்லுபடியாகாது எனவும்", மகிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையும் செயற்படுவதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்படுகின்றது எனவும் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளது. இதனையடுத்து மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஒருபுறம் ஐக்கிய தேசிய முன்னணியும் மறுபுறம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, பொதுஜன பெரமுன ஆகியனவும் ஆட்சிப் பீடத்தைத் தம் வசமாக்கக் கடும் மோதலில் ஈடுபட்டன. உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் பல்வேறு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. 19 ஆவது அரசியலமைப்பு தீர்மானத்தின் சரத்துகள் உருட்டி எடுக்கப்பட்டு வியாக்கியானங்கள் முன்வைக்கப்பட்டன. இன்னொரு புறம் நாடாளுமன்றம் வன்முறைக் களமாக மாற்றப்பட்டதும் பின்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரும், பொதுஜன பெரமுனவினரும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தமையும் இடம்பெற்றன. எனினும் ரணில் தரப்புக்கு ஆதரவான தீர்மானங்கள் எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டன. எப்படியிருப்பினும் டிசம்பர் 14 ஆம் நாள் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளையடுத்து குழப்பங்கள் ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளன. மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்கும் நிலைமை உருவாகியுள்ளது. கடவுள் வந்து கட்டளையிட்டாலும் ரணிலைப் பிரதமராக்கப் போவதில்லை எனச் சவால் விட்ட மைத்திரிபால சிறிசேன சில நிபந்தனைகளின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கச் சம்மதம் தெரிவித்து விட்டார்.

மேற்குறிப்பிட்ட இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போட்டியின்போது யார் வெற்றி பெறுவது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்கியது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. எனவே இரு தரப்பினரும் ஆதரவு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாடினர். அப்போது தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்துமூலம் உறுதி தரும் தரப்புக்குத் தாங்கள் ஆதரவளிக்கத் தயார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்திருந்தது. ஆனால் எந்த ஒரு தரப்பும் எழுத்து மூலமான உறுதிமொழியை வழங்கவில்லை.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போவதாகச் சொல்லி ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தனது முழுமையிலான ஆதரவை வழங்கியது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் மனுவில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட மறுத்து முரண்டு பிடித்த போதிலும் இறுதியில் அவர்களும் கையெழுத்திட்டனர். இக்காலப் பகுதியில் ஐக்கிய தேசிய முன்னணியினர் பெப்ரவரி 4 ஆம் நாளுக்கு முன்பு புதிய அரசியலமைப்பை நிறைவேற்றவும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்ற விடயங்களில் சாதகமான தீர்வை வழங்குவதாகவும் தம்மிடம் உறுதியளித்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்பு கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லை எனவும் சில கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோதும் எவ்வித வாக்குறுதியும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தார். எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் இல்லை என்பதை சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரும் ஏற்றுக் கொண்டனர்.

அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித நிபந்தனையுமின்றி ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆட்சியைக் கைப்பற்ற ஆதரவளித்துள்ளது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 103 ஆசனங்களே உண்டு. அது ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவுடன் 122 வாக்குகளையும் ஜே.வி.பி நடுநிலை வகித்தபோது 117 வாக்குகளையும் பெற்றுக் கொண்டது. ஜே.வி.பி. ரணில் அரசாங்கத்துக்கோ, மஹிந்த அரசாங்கத்துக்கோ ஆதரவளிக்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது. எனவே 103 ஆசனங்களை மட்டும் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணியால் தனியாக ஆட்சியமைக்கவோ, ஆட்சியைக் கொண்டு நடத்தவோ முடியாது. ரணிலோ அல்லது மஹிந்தவோ யார் ஆட்சியதிகாரத்தில் இருப்பது என்பதைத் தீர்மானிக்கும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும். ஆனால் இந்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவறி, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற பேரில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது. அதாவது ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகக் கூறி தமிழ் மக்களைக் கைவிட்டு விட்டதா? என்ற கேள்வியும் எழுகிறது.

அதேவேளையில் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்வதற்கு முன்பு மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் மிக முக்கியமானவையாகும். அதாவது ஐக்கிய தேசிய முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணயக் கைதியாகவே உள்ளதாகவும் புதிய அரசியலமைப்பு மூலம் நாடு சமஷ்டி முறையில் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்படப் போகிறது எனவும், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் முழுமையாக இல்லாமல் மெய்ப்படப் போகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தங்களுக்குள் எவ்வித ஒப்பந்தமோ உடன்பாடோ இல்லையென்று தெரிவித்த நிலையிலும் மஹிந்த சமஷ்டிக்கே போய்விட்டார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இணுவில்



# கேட்கிறதா...? துண்டாடப்படும் கிராமத்தின் குரல்

■ நோக்கன்

ஒரு மனிதன் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு வரலாறு முக்கியம். அப்படி வரலாறு முறையாகவும், நேர்த்தியாகவும் எழுதப்பட வேண்டுமாயின் அதற்கான தரவுகளும் நேர்த்தியாக பேணிப் பாதுகாத்தவையாக இருக்க வேண்டும். அவர்களுக்குரிய பாரம்பரியமும், அவர்கள் வாழ்ந்த அல்லது வாழ்கின்ற எல்லைகளும் வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அனைத்தும் ஒரு எல்லைக்கு உட்பட்டதாகக் காணப்படும்போதுதான் அவை சரியான தரவுகளைத் தரலாம். வரலாற்றை எழுதத் தேவையான விடயங்கள் அல்லது அதற்கான அத்திபாரங்கள் எல்லையற்றுக் காணப்படுமாயின் வரலாற்றில் சிதைவு ஏற்பட்டுவிடும்.

இந்துத் தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாத்துத் தனக்கென்றொரு வரலாற்றை இன்றுவரை முறையாக எழுதிக் கொண்டிருக்கிறது இணுவில் கிராமம். அத்தகைய கலாசாரத்தை உடைத்து நொருக்கி உள்நுழைய முற்பட்ட பிற மதங்களுக்கு இணுவில் கிராமம் பலப்பரீட்சைக் களமாக இருந்ததோடு மட்டுமல்லாது அவர்கள் 'யாரைத் திருப்பினாலும் இணுவிலாரைத் திருப்ப ஏலாது..." (இந்தப் பழமொழியை பின்னாளில் சிலர் யாரைத் திருத்தினாலும் இணுவிலாரைத் திருத்த ஏலாது என்று மருவச் செய்தனர்) என்றுதோல்வியைத் தழுவிக் கொண்டு சென்றதுதான் வரலாறு.

இப்படிப்பட்ட ஒரு கிராமத்தில் தற்போது ஒரு அமைதியின்மை தோன்றியிருக்கிறது. இதனை அவர்கள் தங்கள் இருப்புக்கு ஆபத்து வந்துவிட்டதாக எண்ணிக் கொள்கின்றனர். தமது வரலாற்றுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடப் போகிறதே எனக் கவலையடைந்துள்ளனர். இதுவரை எழுதப்பட்டு வந்த வரலாறு பொய்த்து விடப்போகிறதே என்று ஆதங்கப்படுகின்றனர்.

தற்போது நடைபெற்று வரும் எல்லை நிர்ணயத்தால் வலி. தெற்குப் பிரதேச சபைக்குள் இருக்கும் இணுவில் கிராமத்தின் ஒருபகுதி நல்லூர் பிரதேச சபைக்குள் போகக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதனால் இணுவில் கிராமத்தின் வரலாறு - சொத்து எனக் கருதப்பட்ட பல விடயங்கள் அடையாள மாற்றத்தை எதிர்கொள்ளவுள்ளன. இணுவிலுக்கே உரித்தான பல விடயங்கள் நல்லூருக்குரியதாக மாறும்போது வரலாறும் மாறிக்கொள்ளும். இந்த நிலை தானாகத் தோன்றியதோ பண்டு தொட்டு வந்ததோ அல்ல என்றும் யுத்த கால அமைதியற்ற நிலைமைகளைத் தமக்குச் சாதாகமாக்கிக் கொண்டு சுய அரசியல் லாபத்திற்காகச் செயற்பட்ட ஒரு அரசியல்வாதியாலும், ஒரு முன்னாள் அரச அதிகாரியாலும் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகவே இணுவில் மக்கள் கூறுகின்றனர்.

யுத்தகால நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொண்டு செயற்பட்டவர் அந்த அதிகாரி தொன்று தொட்டு அரசியலைத் தனது வாழ்வாதாரமாகக் கொண்ட ஒருவரும், அரச அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அரசியல்வாதியாக வரவேண்டுமென்ற எண்ணத்திலிருந்த மேற்குறிப்பிட்ட ஒருவரும் ஒன்றிணைந்து அரங்கேற்றிய நாடகம் இது என்று இணுவில் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். நல்லூர் பிரதேச சபை வாக்கு வங்கியை மையமாகக் கொண்டதே இந்தப் புதிய எல்லை நிர்ணயம் என்பது மக்கள் கருத்து. இதில் ஒரு அரசியல் பின்புலம் உண்டு.


தன்னை பிரதேச சபையில் தக்க வைத்துக் கொள்ளவே அந்தக் குறிப்பிட்ட நபர் தனக்கிருக்கும் அரசியல் செல்வாக்கைச் சாதாகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார். அவர் தனது தலைமைக்கூடாக அரசியல் அதிகாரிகளுக்கு நெருக்கத்தைக் கொடுக்கிறார். அதற்கு அவர் தனக்குத் துணையாக அந்தக் கிராமத்திலுள்ள ஒரு ஓய்வுபெற்ற அதிகாரியை அரசியலுக்குள் இழுத்துச் செயற்படுகிறார் என்றெல்லாம் இணுவில் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொதுவாகக் கிராமத்து மக்களைப் பகடைக்காய்களாக வைத்துத் தமது அரசில் நகர்வுகளை மேற்கொள்வதில் அரசியல்வாதிகள் கெட்டிக்காரர்கள். அதன்படி கடந்த வாரத்தில் இந்த ஓய்வுபெற்ற அதிகாரி வீடு வீடாகச் சென்று "உங்கள் முகவரியை இணுவிலாக வைத்துக் கொள்ளலாம். உறுப்புரிமையை நல்லூருக்கு மாற்றச் சம்மதிக்கிறோம்" என்ற பொருள்பட பத்திரத்தில் கையெழுத்து வேட்டையையும் நடத்தியிருந்தார். அதன் உள் நோக்கத்தைப் புரிந்து கொண்ட மக்கள் அவரோடு முரண்பட்டனர். இந்தப் பொதுநலமற்ற அரசியல் சுயநலமிகளால் இணுவில் கிராமத்தை இதுவரை தன்னகப்படுத்தி வைத்திருந்த தமிழ் கட்சியானது அதன் செல்வாக்கை இழக்க நேரிடும் அபாயம் உள்ளதாகவும் பேசப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெற்றி பெற்றதற்கும் சில அரசியல்வாதிகள் மீது மக்கள் கொண்ட அதிருப்தியே காரணம். இந்த விடயத்தில் தனது கட்சி உறுப்பினர்களா அல்லது மக்களா? முக்கியமானவர்கள் என்று அந்தத் தமிழ்க் கட்சி முடிவெடுக்க வேண்டும்.

பொதுவாகத் தேர்தல்களின்போது இணுவில் கிராமத்தின் வாக்கு வங்கி மிகவும் முக்கியமானது. இதனால் தற்போது இப்பகுதியைப் பிரநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரும், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களும், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும் இந்த விடயத்தில் கவனமெடுத்து இணுவில் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறையை நிரூபிக்க வேண்டும் என்பதே இணுவில் மக்களின் எதிர்பார்ப்பு.

# திருக்குறளை வள்ளுவர் எழுதவில்லை...!

## சர்ச்சையை கிளப்பும் சமணர்கள்



திருவள்ளுவர் இன்றைய சென்னையின் மயிலாப்பூரைச் சேர்ந்தவர் என்கிறது ஒரு கூட்டம், இல்லை அவர் திருவண்ணாமலையின் வந்தவாசியில் வாழ்ந்தவர் என்கிறார்கள் சமணர்கள்...! திருவள்ளுவரா, குந்தகுந்தரா? - என்ன சொல்கிறது சமண ஆய்வு?

திருக்குறள் குறித்து சமண ஆய்வுகள் என்ன சொல்கின்றன என்று காண்போம்.

உலகப்பொதுமறை திருக்குறளை எழுதிய திருவள்ளுவர், இன்றைய சென்னை மயிலாப்பூரில் இரண்டாம் - எட்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்து வாழ்ந்தவர் என்றுதான் இதுவரையிலான நூல்கள் பதிவுசெய்து வந்துள்ளன. அதற்கான சான்றுகளையும் முன்வைத்துள்ளனர் தமிழ்மொழி ஆய்வாளர்கள். ஆனால், இதேசமயம் திருவள்ளுவரைப் பற்றிய வேறு பார்வையும் இங்கே முன்வைக்கப்படுகிறது. திருக்குறள் எவ்வித மதங்களின் சாயலுமற்றது என்று கூறப்பட்டாலும் ஒவ்வொரு மதமும் திருவள்ளுவரை தங்களுக்கானவர் என்று உடைமையாக்கிக் கொள்கிறார்கள்.

திருவண்ணாமலை மாவட்டத்தின் வந்தவாசியில் இருக்கிறது பொன்னூர் கிராமம். இது நெசவுத் தொழில் செய்பவர்கள் அதிகம் வசிக்கும் பகுதி. ஏற்கனவே, சமணர் படுகைகளும் சமணர்கள் வசித்து வந்ததற்கான எண்ணற்ற தடங்களையும் கொண்டது வந்தவாசி. இந்த நிலையில், பொன்னூர் கிராமத்தில்தான் உண்மையில் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்கிற சான்றுகளை முன்வைக்கிறார்கள் அங்கிருக்கும் சமண மதப்பற்றாளர்கள்.

தமிழகத்தில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு இன்றளவும் சமண மதத்தைச் சேர்ந்த, குறிப்பாக தமிழ்ச் சமணர்கள் அதிகம் இருக்கும் இடமாக வந்தவாசியும், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளும் பார்க்கப்படுகின்றன. அங்கே ஒவ்வொரு இந்து மதக் கோயில்களுக்கு அருகிலும் ஒரு சமண வாழ்வியல் நெறியாளர்களின் கோயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தெருவுக்கும் பிள்ளையார் கோயில் இருப்பதுபோல அங்கே சமண வழிப்பாட்டுக் கோயில்கள் இருக்கின்றன. சமணர்களில் திகம்பரர்கள் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள் இந்தப் பகுதியில் அதிகம் வசிக்கிறார்கள்.

பொன்னூரில் இருக்கும் 'குந்தக் குந்தர்' மலையும்,




அதையொட்டி உள்ள தமிழ்ச் சமண சிறுவர்களுக்கான உண்டு உறைவிடமும் இதில் அடக்கம். திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தார் எனச் சொல்லப்படும் அதேகால கட்டத்தில்தான் அந்த மலையில் 'குந்தக் குந்தர்' என்னும் சமண முனிவர் வாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது.

சமண மதத்தில் 'திரி' என்கிற சொல்லாடல் புழக்கத்தில் உண்டு. 'குந்தக் குந்தர்' அந்த மலையில் அமர்ந்து எழுதிய 'திரிகுறள்' தான், திருக்குறளாக திரிபு அடைந்து விட்டது எனக் குறிப்பிடு கிறார்கள்.

சுமார் இருநூறு அல்லது முந்நூறு படிகளை உடைய அந்தப் பொன்னூர் மலையின் அடிவாரத்தில் சமண ஸ்தூபம் வரவேற்கிறது. செங்குத்தாக இருக்கும் அந்தப் படிகளில் ஏறி, உச்சியை அடைந்தால் அங்கே குந்த குந்தர் என்று எழுதப்பட்ட ஒரு சிறு மண்டபத்துக் குள்ளே பாதங்கள் வைக்கப்பட்டு அதற்கு அருகிலேயே படுகை ஒன்றும் பதிக்கப் பட்டிருக் கிறது. அதில் குந்தகுந்தரின் பெயரும் அவர் வாழ்ந்த காலம் உள்பட சில தமிழ்ச் சமணப் பாடல்களும் பதியப்பட்டிருக்கின்றன.

மலைமுகட்டிலிருந்து பார்த்தால் வந்தவாசி முழுவதும் தெரிகிறது. கூடவே மலையின் கீழ் இருக்கும் உண்டு உறைவிட இல்லமும் அடக்கம். இல்லத்திற்குச் சென்றதும் அங்கிருக்கும் பிள்ளைகள் 'ஜீனேந்திரா' என்று வணக்கம் சொல்லி நம்மை வரவேற்கிறார்கள். எல்லோரும் பெரும்பாலும் ஆறு தொடக்கம் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள். அவர்களுக்கு மதம் பற்றிய எந்த மாதிரியான புரிதல்கள் இருக்கின்றன என்பது தெரியவில்லை. அங்குள்ள பிள்ளைகளுக்கு மத போதனைகள் மேற்கொள்ளப்படுகிறதா? என்கிற கேள்வியும் ஒருபக்கம் இருக்கிறது. ஆனாலும், தமிழ் வளர்க்கும் சமூகமாக அந்த இல்லத்தின் நிர்வாகிகள் இருக்கிறார்கள்.

இல்லத்தை தலைமுறை தலைமுறையாக நிர்வகிக்கும் சமணர்கள், மாதந்திர திருக்குறள் ஆய்வுக்கூட்டத்தையும் நடத்தி, அது தொடர்பாக விவாதிக்கிறார்கள். திருவள்ளுவரை மதச் சாயமற்றவர் என்று கூறப்பட்டாலும் சமணர் என்பது தொடர்பான ஓலைச்சுவடி ஆதாரங்கள், உண்டுஉறைவிட நிர்வாகிகள்வசம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

திருவள்ளுவர் ஏன் மதங்களைச் சார்ந்தவராகப் பார்க்கப்படுகிறார்? திருக்குறளுக்கு ஏன் மயிலாப்பூர் என்றும், வந்தவாசி என்றும் மத அடையாளம் பூசப்படுகிறது? அப்படியென்றால் உண்மையிலேயே திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய உண்மை ஆய்வுகள்தான் என்ன என்ற கேள்வியும் கூட எழுகிறது.

# வாரப்பலன்

## மேடம்
கடவுள் ஆசியுடன் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்கள் வகையில் மனத்தாங்கல்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு பல வகையிலும் லாபம் வரும். செலவு செய்யும் நேரத்தில் கவனமாக இருக்கவும். விவசாயிகளுக்கு பயிர்விளைச்சலில் பாதிப்பு இராது.

## ரிஷபம்
ஆற்றல் அதிகரிக்கும். செயல்கள் திட்டமிட்ட படியே நடந்தேறும். காரியங்களில் இடையூறுகள், குழப்பங்கள் இருந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். விவசாயிகளுக்கு எதிர்பாராத வரவு கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

## மிதுனம்
எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். உறவினர்களிடம் அனுசரித்துச் சென்றால் நல்லது. பொருளாதாரத்தில் சிறப்பைக் காண்பீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் நல்ல முறையிலேயே நடக்கும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் கைகூடும்.

## கடகம்
பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். நினைத்த ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். பெரியவர்களின் ஆசியுடன் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரிகளுக்கு பல வகையிலும் லாபம் வரும். வாக்குவாதங்களை தவிர்க்கவும்.

## சிம்மம்
முன்னேற்றத்திற்குத் தடை வராது. தெய்வ பலம் கூடும். தொழிலில் வெற்றி உண்டாகும்., எடுத்த காரியங்களைக் குறித்த காலத்திற்குள் முடித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் மேன்மை உண்டாகும். உறவினர்கள் நட்புடன் பழகுவார்கள்.

## கன்னி
தாமதமானாலும் உங்கள் முயற்சிகள் சிறிது இழுப்பறிக்குப்பிறகே வெற்றி பெறும். மற்றவர்களைச் சார்ந்து செயலாற்றிய நீங்கள் சுயமாகச் செயலாற்றும் காலமிது. தைரியமாக திட்டமிட்டுச் செயல்படுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்காது.

## துலாம்
உடல்நலம் சீராக இருக்கும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற் கான முயற்சிகளை மேற்கொள்ளுவீர்கள். திட்டமிட்ட வேலைகளில் வீண் அலைச்சல்களும் அநாவசியச் செலவுகளும் உண்டாகும்.

## விருச்சிகம்
எதிர்பார்த்த பணவரவும் உழைப்புக்கேற்ற பலனும் கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் ஒரு பெரிய சாதனைக்கு அடித்தளமாக அமையும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலைகள் யாவையும் கருத்துடன் செய்து முடிப்பார்கள்.

## தனுசு
சமூகத்தில் உயர்ந்தவர்களின் நட்பு கிடைக்கும். கவலைகள் இருக்கும். எல்லாவற்றிலும் பிறரிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் வேலை களைக் குறித்த நேரத்தில் முடித்தால் தான் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறமுடியும்.

## மகரம்
தோல்விகள் அகன்று வெற்றிகள் குவியும். செயல்கள் சரியான இலக்கை அடையும். ஆன்மிகத்தில் சாதனை புரிவீர்கள். புனித பயணங்களை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் அமைதியைக் காண்பீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

## கும்பம்
பொருளாதார நிலைமை சற்று மந்தமாகத்தான் இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அளவாகத்தான் இருக்கும். உற்றார் உறவினர்களிடம் அனுசரித்துச் செல்லவும். உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் சிறிதளவே நிறைவேறும், மனதை பிரச்சினைகள் அரித்து வரும்.

## மீனம்
பெரிய திருப்பங்கள் ஏற்படும். ஆனாலும் பணவரவு சரளமாக இருக்கும். காரியங்கள் அனைத்தையும் வெற்றியுடன் முடிக்கும் ஆற்றல் உண்டாகும். சிலருக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு என்பது இராது.



கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேசத்தில் கம்பரலிய திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைகள் பற்றி நடைபெற்ற மீளாய்வுக் கூட்டம்







கலாபூஷணம் செல்லையா குமாரசாமியின் "பிள்ளைநிலா" சிறுவர் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா கடந்த 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது




மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அந் நிறுவனத்தின் தலைவர் என்.ஜெயவனிதா தலைமையில் நடைபெற்றது.



வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் மைதான அபிவிருத்திக்கு மாகாண சபை பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பணத்தின் மூலம் மைதானத்திற்கான மின்னொளி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது



வவுனியா பொது வைத்தியசாலையில் நத்தார் தினத்தை முன்னிட்டு ஆராதனை நிகழ்வுகள் நடைபெற்றபோது..

# பல முறை யோசி



நரி ஒன்று தாகத்தால் தவித்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. என்ன செய்வது? தண்ணீரைத் தேடி அலைந்தது. தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைப் பார்த்தது. கிணற்றின் அருகே சென்றது, கிணற்றில், கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நரி, வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. உட்னே வாளி 'விர்'ரெனக் கிணற்றின் உள்ளே சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்தபின் மேலே பார்த்தது. 'எப்படி வெளியேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது. 'மேலேயிருந்து யாராவது கயிற்றை இழுத்தால்தானே என்னால் மேலே போக முடியும். என்ன செய்வது?' நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது.

அந்த நேரம் பார்த்துக் கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிண்றின் உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டது. "அடடா! நரி ஐயா! உள்ளே என்ன செய்கிறீர்கள்?" எனக் கேட்டது. "நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன், கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள்" என்றது நரி ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறுமுனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி 'சரசர'வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போது நரி அமர்ந்திருந்த வாளி மேலே வந்தது. நரி மேலே வரும் போது பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது. "நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்". என்று கூறிக் கொண்டே மேலே சென்றது. மேலே வந்ததும் கிணற்றுச் சுவரின் மேலே தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய்.!

**ஒரு செயலைச் செய்வதற்கு முன் பல முறை யோசிக்க வேண்டும்**



## இருந்த பழமொழியும் திரிந்த பழமொழியும்

**திரிந்தது**
1. ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்
**இருந்தது**
ஆடிக் காற்றில் அம்மையும் பறக்கும்
**திரிந்தது**
2. அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்
**இருந்தது**
அடிமேல் அடிவைத்தால் அம்மியும் தகரும்.



## அழகர் யானை



**ஆனை ஆனை**
**அழகர் ஆனை**
**அழகரும் சொக்கரும்**
**ஏறும் ஆனை**

**கட்டிக்கரும்பை**
**முறிக்கும் ஆனை**
**காவேரி தண்ணீரை**
**கலக்கும் ஆனை**

**குட்டி ஆனைக்குக்**
**கொம்பு முளைச்சுதாம்**
**பட்டணமெல்லாம்**
**பறந்தோடிப் போச்சுதாம்!**





பாம்புகளில் சில பாம்புகள் மட்டும் நச்சுத் தன்மை கொண்டவை. பெரும்பாலான பாம்புகள் நச்சுத்தன்மை அற்றவை. அவை கடித்தால் தடிப்பு, சொறி, உடல் வீக்கம் ஏற்படும், உயிருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. விரியன் பாம்புகள் மிகவும் கொடிய நச்சைக் கொண்டவை. கடித்த சில மணித்துளிகளிலே உயிரைக் குடிக்கும் தன்மை உடையவை.

பாம்புகள் பெரும்பாலும் இருட்டிய பிறகே இரை தேடப் புறப்படுகின்றன. எலி, தவளை, சிறுசிறு பூச்சிகள், மற்ற பறவைகளின் முட்டைகள் ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றன. சில பாம்புகள் மற்ற வகைப் பாம்புகளையே உண்ணக் கூடியவை. பாம்புகளில் மிகவும் எடையும், வலுவும், நீளமும், கொண்டவை மலைப்பாம்புகள்.

## அறிவோம் தெளிவோம்

**வானம் நீலநிறமாகத் தெரிகிறதே. ஏன் இந்த நிறம்?**

வானம் என்பதே இல்லை. நம்முடைய பூமியைச் சுற்றி காற்று மண்டலம் இருக்கின்றது. அது 200 மைல் தூரம் வரைஇருப்பதாகச் சொல்கிறார்கள். சூரியனுடைய ஒளி அந்தக் காற்று மண்டலத்தினூடாக வரும்போது, அதிலுள்ள தூசிகள் ஒளியின் இதர நிறக் கதிர்களைக் கிரகித்துக் கொண்டு, நீல நிறக் கதிர்களை மட்டும் நமக்கு அனுப்புகின்றன. அதனால்தான் வானம் இருப்பதுபோலவும், அது நீல நிறமாக இருப்பதுபோலும் தோற்றம் தருகின்றது. இரவில் சூரிய வெளிச்சம் இல்லை. அதனால் நட்சத்திரங்களிடையே நீலவானம் தெரிவதில்லை.



## குறள் ஒன்று விளக்கம் இரண்டு

குறள் 785:
**புணர்ச்சி பழகுதல் வேண்டா**
**உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்.**

**மு. கருணாநிதி உரை:**
இருவருக்கிடையே நட்புரிமை முகிழ்ப்பதற்கு ஏற்கனவே தொடர்பும் பழக்கமும் வேண்டுமென்பதில்லை. இருவரின் ஒத்த மன உணர்வே போதுமானது.

**சாலமன் பாப்பையா உரை:**
ஒருவனோடு ஒருவன் நட்புக் கொள்வதற்கு அருகருகே இருப்பதோ, நெருங்கிப் பழகுவதோ வேண்டியதில்லை. இருவரது எண்ணமும் ஒத்திருந்தால் அதுவே நட்பு என்னும் தோழமையைக் கொடுக்கும்.

## திசைப் பெயர்ப் புணர்ச்சி




வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்பன திசையை உணர்த்தும் பெயர்களாதலால் இவை திசைப் பெயர்கள் ஆகும். ஒரு திசைப் பெயரோடு மற்றொரு திசைப் பெயரும் (வடக்கு + கிழக்கு = வடகிழக்கு) பிற பெயர்களும் (தெற்கு + நாடு = தென்னாடு) சேருவதைத் திசைப்பெயர்ப் புணர்ச்சி என வழங்குகிறோம்.

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
வடக்கு + மேற்கு = வடமேற்கு

இவை நிலைமொழியின் ஈற்றில் உள்ளக் என்னும் மெய்யெழுத்தும், கு என்னும் உயிர்மெய்யெழுத்தும் கெட்டுப் புணர்ந்தன.

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
தெற்கு + மேற்கு = தென்மேற்கு

இவை, நிலைமொழியீற்றில் உள்ள கு என்னும் உயிர்மெய் கெட்டு, றகர மெய் னகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தன.

மேற்கு + காற்று = மேல்காற்று
மேற்கு + ஊர் = மேலூர்

இத்திசைப் பெயர், திசைப் பெயரல்லாத வேறு பெயர்களோடு சேரும் பொழுது, நிலைமொழியிலுள்ள உயிர்மெய்யெழுத்தான கு கெட்டு, றகர மெய், லகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தன.

கிழக்கு + கடல் = கீழ்கடல்
கிழக்கு + நாடு = கீழ்நாடு

இத்திசைப் பெயர், பிறவற்றோடு சேரும் பொழுது, நிலை மொழியில் உள்ள ககர ஒற்றும், ஈற்றும் உயிர்மெய்யெழுத்தான குவ்வும், கிழ என்பதில் உள்ள அகரம் கெட்டுக் கீழ் என முதல் எழுத்து நீண்டும் புணர்ந்தன.

# மார்கழி ஆதிரையும் சிவ தாண்டவமும்

'ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று மார்கழித் திருவாதிரையின் பெருமையைப் பேசுகிறது, மயிலை திருஞான சம்பந்தர் தேவாரம். சிவலாயங்கள் அனைத்தும் ஆருத்ரா தரிசனம் காணும் அற்புதத் திருநாள் (2018 டிசெம்பர் 23) மார்கழித் திருவாதிரை. அடியவர் சேந்தனார் இறைவனுக்குக் களியமது படைத்ததும், அவருக்கு எம்பெருமான் முக்திப்பேறு அருளியதும் திருவாதிரை திருநாளில்தான்.

அதுமட்டுமா? புலிக்கால் முனிவருக்கும் பதஞ்சலி முனிவருக்கும் தில்லை அம்பல வாணன் ஆடல்கோலம் காட்டிய நாளும் இதுவே. இந்த இருவர் மட்டுமின்றி, தில்லை நாதனின் தாண்டவ தரிசனத்தைக் கண்ட வேறு அருளாளர்களும் உண்டு. ஆம்! பதஞ்சலி, புலிக்கால் முனிவர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி ஆகியோரும், திருமந்திரம் அருளிய திருமூல ரும் திருத்தாண்டவத்தை தரிசித்து மகிழ்ந்த அருளாளர்கள்.

அரனாரின் ஆடலை அருளாளர்கள் தரிசிக்கத் துடித்ததும், பெரும் தவமும் யோகமும் செய்து சிவதாண்டவம் கண்டு உவப்புற்றதும் ஏன்?

சிவதாண்டவத்தின் மகிமை அப்படி! அவன் ஆடினால்தான் அகிலமும் இயங்கும்.




பரமன் தன் ஆட்டத்தால் ஐந்தொழில்களையும் நடத்துகிறான் என்கின்றன ஞானநூல்கள்.

பொன்னம்பலமான சிதம்பரத்தில் சிவனார் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார். இதனுடன் அஜபா தாண்டவம், சுந்தரத் தாண்டவம், பிரம்ம தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் ஆகிய பஞ்ச தாண்டவங்களையும் இங்கு ஆடுகிறார் ஈசன் என்றும் கூறுவர். அதாவது, ஐந்தொழில்களையும் இங்கேயே நடத்துகிறார் என்றும் கூறுவர்.

வெள்ளி அம்பலமாகிய மதுரையில், கால் மாறி ஆடுகிறார். சந்தியா தாண்டவம் அது. அங்கே காத்தல் தொழில் நிகழ்கிறதாம். தாமிர சபையாம் திருநெல்வேலியில், காளிகா தாண்டவம் ஆடிக்கொண்டே படைத்தலைச் செய்கிறார். ரத்தின சபையான திருவாலங் காட்டில் காளியுடன் நடனப் போட்டியில் ஆடுகிறார் பரமன். ஊர்த்துவ தாண்டவம் அது. அங்கே அருளல் தொழில் நிகழ்கிறதாம். சித்திர சபையான திருக்குற்றாலத்தில் மறைத்தல் தொழிலை திரிபுர தாண்டவமாக ஆடிக்கொண்டே செய்கிறார்.

இறைவனின் இந்தத் திருநடன தத்துவத்தைப் படித்தும் பார்த்தும் இன்றைய விஞ்ஞான உலகமும் வியக்கிறது. எங்கும் தெரியுமாறு அண்டங்கள் புரள நடராசர் ஆடுவது பிரபஞ்ச தெய்வீக நடனம். Cosmic Dance என்பர். சுவிற்சர்லாந்தில் உள்ள ஜெனீவா இயற்பியல் அணு ஆய்வு மையம் European Organisation for Nuclear Research வளாகத்தின் முன் பெரிய நடராசர் சிலையை 2004 ஜூன் 18 அன்று நிறுவியுள்ளது. டாக்டர் பிரிட்ஜாப் என்ற இயற்பியல் விஞ்ஞானி தன் நூலில் நடராசர் நடனத்தை பிரபஞ்ச இயக்கத்தோடு ஒப்பிட்டு எழுதியுள்ளார். இத்தகு மகிமைகள் கொண்ட தாண்டவத்தை தரிசித்து அதிலேயே லயித்துவிட, நமக்கே உள்ளம் துடிக்கும்போது, அருளாளர்களைக் கேட்கவா வேண்டும்?

# அழுக்குக் கொட்டிலில் பிறந்த அகிலத்தின் நாயகன் இயேசு



விண்ணகத்திலிருந்து மண்ணகம் வந்த தேவகுமாரன் இயேசு கிறிஸ்து, தனது இரத்தத்தை ஒப்புக்கொடுத்து பாவிகளை மீட்டெடுக்க வந்தார். பாவங்களிலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக்கிடந்த மக்களை நல்வழிப்படுத்த தேவன் இயேசு, மேய்ப்பராக வந்தார். ஆம், 2018 ஆண்டுகளுக்கு முன்பு தூய மரியாளின் மகனாகப் பிறந்தார்.

கன்னி மரியாளுக்கு ஜோசப்புடன் திருமணம் முடிக்கப் பேசியிருந்த வேளையில் இறைதூதர் கபிரியேல், மரியாளின் முன்பு தோன்றி 'ஆண்டவர் கிருபையால் உனக்கு ஒரு மகன் பிறப்பார், அவருக்கு 'இயேசு' என்று பெயரிடுவாய்' என்று ஆசீர்வதித்தார். கன்னியான மரியாள் தேவகிருபையை எண்ணித் தொழுதாள். 'திருமணம் செய்யாத தனக்கு மகன் பிறந்தால் அது அபத்தமாகுமே' என்று எண்ணி அழுதாள். ஒரு கண்ணில் ஆனந்தச் சாரலும், மறுகண்ணில் அழுகையின் தூறலுமாக நின்ற மரியாளின் நிலையறிந்து அங்கு வந்த இறைதூதர் அவரைத் தேற்றினார்.

ஆண்டவரின் விருப்பப்படியே மரியாள் கர்ப்பவதி ஆனாள். ஆண்டவரின் சித்தத்தைப் புரிந்துகொண்ட ஜோசப் பெருமகனார் மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டார். மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக, அவரவர் தங்களது சொந்த ஊருக்குச் சென்று பதிவு செய்ய வேண்டும் என்ற அறிவிப்பினால் நாசரேத் நகரிலிருந்து ஜோசப்பும் மரியாளும் தங்களது சொந்த ஊரை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் செல்லும் வழியில் பெத்லகேம் நகரில் ஒரு மாட்டுத்தொழுவத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தார். அகிலத்துக்கே நாயகரான நம் இயேசு கிறிஸ்து ஓர் அழுக்குக் கொட்டிலில் பிறந்தார். கருணையே வடிவான கர்த்தர் காரிருளில் பிறந்தார். நிரைகள் (ஆடுகள்) எல்லாம் கூடி குறைகள் இல்லாத அந்த கோமகனைத் தொழுதன. வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் பூமியில் பிறந்த அந்தச் சூரியனை வணங்கின. காலங்காலமாக இருண்டு கிடந்த பூமியை, ஒளிவீசி மலரச்செய்ய ஒரு யுக சூரியன் குழந்தையாக பிறந்தது. ஆண்டவரின் திருக்குமாரனை ஏந்திய கன்னி மரியாள் பெரிதும் மகிழ்ந்தாள்.

இப்படித்தான் இயேசு கிறிஸ்துவின் ஜனனம் நடந்ததாக வேதாகமம் சொல்கிறது. ஆனால் உண்மையில் இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார். நித்திய ஜீவனுடன் உலவிக் கொண்டிருக்கிறார். எல்லையில்லா பெருங்கருணை கொண்ட அந்த தேவன் நமக்காக ஜீவிக்கிறார். நமக்காக மரித்த கர்த்தர், நமக்காகவே உயிர்த்தெழுந்தார்.

உயிர்த்தெழுந்த அந்தப் பரிசுத்த ஆவி, நம்மோடு எப்போதும் துணையாக இருந்து வருகிறது. இதைக்கொண்டாடவே கிறிஸ்துமஸ்' என்னும் விழா உருவானது. என்றோ பிறந்த வரலாற்றை நினைவுக் கூரவல்ல இந்த திருவிழா. எப்போதுமே நம்முடன் தேவன் இருக்கிறார் என்பதை நினைவு படுத்தவே தேவனின் இந்தப் பிறந்த நாளை சிறப்பிக்கிறோம்.

## விரும்பியே கட்டுப்பட்டோம்

வானில் கருமேகங்களைப் பார்க்க நேர்ந்தால் நபிகளார் மிகுந்த பதற்றமடைவார். அந்த பதற்றத்தில் தன்னிலை மறப்பார். எந்தளவுக்கு என்றால் அத்தகைய ஒரு தருணத்தில் தன் மேலங்கியையே அணிய மறந்தவராய் வானத்தையே மீண்டும் மீண்டும் பார்க்கலானார்.

இறைவனின் அருளையும் தண்டனையையும் பிரபஞ்ச விதிகளின் ஓட்டங்களையும் பற்றி ஆழ்ந்து உணர்ந்த புனித ஆன்மாவாக அண்ணலார் விளங்கியதாலும் மனித குலத்தின் மீதான அளவற்ற கரிசனம் கொண்டதாலும் இந்தப் பதற்ற நிலை அவரிடம் காணப்பட்டது.

மனிதனைத் தவிர அண்ட சராசரங்களில் உள்ள பூமி, கல், மண், நீர் நிலைகள், விலங்குகள், பறவைகள், சிறு உயிர்கள், மரம், செடிகொடிகள், கோள்கள், நிலவு, கதிரவன் என அனைத்து படைப்புகளும் தன்னைப் படைத்தவனைப் பற்றிய நினைவிலும் துதிபாடலிலும் தொடர்ச்சியாக இணைந்திருக்கின்றன.

இறைவன் அவற்றுக்கு விதித்த கட்டளைகளையும் இயல்பையும் அவை ஒரு போதும் மீறுவதில்லை. இதன் விளைவாக அவை பிரபஞ்சத்தின் தாள லயத்துடன் துளிகூடப் பிசகாமல் ஒத்திசைந்து இயங்குகின்றன.

"விரும்பியோ, விரும்பாமலோ நீங்கள் கட்டுப் பட்டு நடக்க வேண்டும்" என்று வானத்துக்கும் பூமிக் கும் இறைவன் கூறினான். "விரும்பியே கட்டுப்பட் டோம்" என்று அவை கூறின. (குர்ஆன் 41:11)

இறைவனுடன் உள்ள இந்த அறுபடாத கண்ணியின் விளைவாக அவை பிரபஞ்சத்தினுள் பொதிந்திருக்கும் பல்வேறு விசைகளின் விதிகளையும் இயக்கங்களையும் நன்கு அறிந்திருக்கின்றன. இதன் விளைவாக அவற்றால் பேரழிவை முற்கூட்டியே உணர முடிகின்றது.

மனிதர்கள் பாவங்களை அக்கிரமங்களை அநீதிகளைப் புரிவதன் வாயிலாகவும் தங்களுடைய ஆதி இயல்பை விட்டுப் பிறழ்வதோடு பிரபஞ்சத்தின் ஓட்டத்திலிருந்தும் விலகி விடுகின்றனர். இறுதியாக பிரபஞ்ச நாதனுடனான பிணைப்பையும் சிதைத்துக்கொள்கின்றனர். இதன் விளைவாகச் சிறியதும் பெரியதுமான பேரழிவுகளை அவர்கள் சந்திக்கின்றனர்.

# புதுவிதி PUTHU VITHI 100ஆவது இதழ் நிறைவை முன்னிட்டு ந
## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள

**ஒவ்வொரு பிரிவிலும் 1ஆம், 2ஆம் 3ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரி பரிசும் வழங்கப்படும். பாராட்டுப் பரிசு பெறுவோருக்கு புத்தகப் பரிசுகள் வழ**

### சிறுகதைகள்

**01) முதலாம் இடம்**
பொ.பாபு
பொ.சகாயம் (பாபு)
179/399, 7ஆம் ஒழுங்கை,
வசந்தபுரம், திருநாவற்குளம், வவுனியா.

**02) இரண்டாம் இடம்**
கண்ணதாசன்
ஈழநல்லூர்

**03) மூன்றாம் இடம்**
திருமதி ரேணுகா செயரூபன்
வ/நெளுக்குளம் க.ம.வி., வவுனியா

### சிறப்புப் பாராட்டுப் பரிசு

01) பொ.சிந்தியா
உதயன் ஜான்சி வீடியோ
பள்ளிவாசல் வீதி, மன்னார்

02) புகழ்
89, இரண்டாம் குறுக்குத்தெரு
மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்

03) லோஜிதா முரளிதரன்
நெல்லியடி வடக்கு, கரவெட்டி

### பாராட்டுப் பரிசு

01) திருமதி அற்புதராணி காசிலிங்கம்
89/1, இராசவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

02) கண்ணதாசன்
ஈழ நல்லூர், யாழ்ப்பாணம்

03) டிலக்ஷ்ண்ணா சுந்தரலிங்கம்
29/1 கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

04) சி.சோமேஸ்வரபிள்ளை
37/3 மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில்

05) சுதாகரன் யோணகரன்
28, ஹெலன்காமம் வீதி,
சங்குவேலி தெற்கு, மானிப்பாய்

06) T.ஜனியா
மண்டுவில் அம்மன் கோயில் வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி

07) புகழ்
89, 2ஆம் குறுக்குத் தெரு,
மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்

08) ந.பிரசாந் - திருமதி தாரிணி சதீஸ்கரன்
கந்தசாமி கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

09) ரிஷோபிகா செயரூபன்
வ/இறம்பைக்குளம் ம.வி. வவுனியா

10) கே.எஸ்.சிவஞானராஜா
115/1 ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

11) தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

### கவிதை

**01) முதலாம் இடம்**
மாதவி உமாசுதசர்மா
21/1A பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

**02) இரண்டாம் இடம்**
திருமதி ரேணுகா செயரூபன்
வ/நெளுக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா

**03) மூன்றாம் இடம்**
தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

செல்வி ரிஷோனா செயறுபன்
வ/இறம்பைக்குளம் ம.வி.
271, 1ஆம் ஒழுங்கை, உக்குளாங்குளம் வவுனியா

### பாராட்டுப் பரிசு

01) கண்ணதாசன்
ஈழநல்லூர்

02) கண்ணதாசன்
ஈழநல்லூர்

03) தேனூர் கௌசிகன்
தேத்தாத்தீவு, களுவாஞ்சிக்குடி

04) தமிழ் நேசன் (புயல்)
18, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

05) அட்சயா மதிமோகன்
46, சந்தனமாதா கோயில் 2ஆம்
ஒழுங்கை, சுண்டிக்குளம், யாழ்ப்பாணம்.

06) தெய்வேந்திரன் மிதிலா மாறன்
ஆசிரியர்வள நிலைய வீதி, மறக்காரம்பனை, வவுனியா

07) சாதுரியா சிவபாலன்
மே/பா, சு.ஆறுமுகதாஸ்
ஈவினை மத்தி, புன்னாலைக்கட்டுவன்
(பலாலி தெற்கு, வசாவிளான்)

08) விக்னேஸ்வரன் சுயந்தன்
முன்பள்ளி வீதி, மறக்காரம்பனை, வவுனியா.

09) தமிழ்நேசன்
இலந்தைக் குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

10) தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

11) க.பாவலன்
அறிவாலையம், வீமன்புலம்
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

12) ரஜிதா சுரேஸ்குமானர்
கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி.

13) ஈழநல்லூர் கண்ணதாசன்

### கட்டுரை உய

**01) முதலா**
யோகரட
யாழ். ம

**02) இரண்ட**
ஜே.ஜார்
கிளி/இர

**03) மூன்றா**
கணேசல
புதுக்குடி

### பாராட்டுப் பரிசு

01) புவனே
கிளி/இர

02) ரிசோபி
இறம்பை

03) ஜெனிபா
வேம்படி

04) அ.கனிஸ்
கிளி/இர

05) கிருஷ்ன
புதுக்குள

06) சுதாகரன்
கிளி/இந்

### கட்டுரை சாத

**01) முதலாம்**
சரண்யா
யாழ். ம

**02) இரண்ட**
அரவிந்த
யாழ். இ

**02) இரண்ட**
ஹென்றி
கிளி/ இர

### சிறப்புப் பாராட்

01) கனகராச
கொடிகா

02) உதயதா
மீசாலை

03) அக்ஷயா
கிளி/இரா

### பாராட்டுப் பரிசு

01) அ.நியூட்
நெடுந்தீ

02) த.பிரசாந்
கந்தசாமி

தயவு செய்து பரிசுகளுக்காகத் தெரிவுசெய்
விலாசத்தையும், தொலைபேசி இலக்கத்தைய
பின்வரும் முகவரியுடன் தெ

**புதுவிதி, 107, இராசவீதி, திரு**

நடத்தப்பட்ட
களின்

பரிசும், புத்தகப்
வழங்கப்படும்

உயர்தர வகுப்பு

லாம் இடம்
ாகரட்ணம் பானுஷியன்
். மத்திய கல்லூரி

ண்டாம் இடம்
ஜார்னிஜா
/இராமநாதபுரம் ம.வி.

ர்றாம் இடம்
ணசலிங்கம் ஜீவனா
க்குடியிருப்பு மத்திய கல்லூரி

பரிசு
னேஸ்வரன் கஜலக்சி
/இராமநாதபுரம் ம.வி.

ாபிகா செயரூபன்
ம்பைக்குளம் ம.ம.வி.

ினிபா கில்பேட் குணம்
ம்படி மகளிர் கல்லூரி

ினிஸ்ரா
/இராமநாதபுரம் ம.வி.

ஷ்னகா கபிலன்
க்குளம் ம.வி., சாஸ்திரிகூளாங்குளம்

கரன் கிருத்திகா
/இந்து ம.வி.

சாதாரண தரம்

லாம் இடம்
ர்யா விக்னேஸ்வரன்
. மகாஜனக் கல்லூரி

ண்டாம் இடம் :
விந்தன் அபர்நாத்
. இந்துக் கல்லூரி

ண்டாம் இடம் :
ன்றிபோல் அஜந்தன் நிவேதிகா
/ இராமநாதபுரம் ம.வி.

ராட்டுப் பரிசு
ராசா தமிழ்ச்செல்வன்
டிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

ுதாஸ் கீர்த்தனா
லை வீரசிங்கம் மத்திய கல்லூரி

ஷியா ஜெயக்குமார்
/இராமநாதபுரம் ம.வி.


ரிசு
யூட்டன்
ந்தீவு மகா வித்தியாலயம்

சாந்த்
சாமி கோயிலடி, கோப்பாய் மத்தி

செய்யப்பட்ட படைப்பாளிகள் தமது தபால்
தையும் குறிப்பிட்டு எம்முடன் கடிதம் மூலம்
ன் தொடர்புகொள்ளவும்.
திருநெல்வேலி - கோப்பாய்.

# “ஈழத்தை, ஈழ மக்களை, மொழியை கொச்சைப்படுத்தி வந்த படைப்புகள்தான் அதிகம்!”

- அகர முதல்வன்




“தமிழீழப் படைப்பின் பிரதிநிதி, நானும் என்னைப் போன்ற ஈழப் படைப்பாளர்களும்தான். ஆனால், நாங்கள்தான் ஒட்டுமொத்த ஈழப் படைப்புகளுக்கும் ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அப்படிச் சொன்னால், எங்கள் மீது விமர்சனங்களை வீசலாம்.”

இதுவரை தன்னுடைய கதைகள், கவிதைகள், குறுநாவல்கள் என எழுத்துகளின் வழியே ஈழநிலம் பற்றி எழுதிக்கொண்டிருந்த எழுத்தாளர் அகரமுதல்வன், முதல்முறையாக குறும்படம் வழியே அந்த நிலத்தைச் சொல்ல முயன்றுள்ளார். அதுபற்றிய அவருடனான உரையாடலில் அவரிடமிருந்து வந்த வார்த்தைகள்தான் மேற்குறிப்பிட்டவை. தொடர்ந்து அவரிடம் அந்தக் குறும்படத்தைப் பற்றி உரையாடினேன்.

“யுத்தம், அதன் விதிகளுக்குள் தான் மனிதனை வைத்துக்கொள்ளும். மனிதனின் விதிகளுக்குள் யுத்தம் என்றைக்கும் அடங்காது. யுத்தம், மனிதர்களைக் கொல்லும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், சாவை விரும்பிச் செல்பவர்களை யுத்தம் கொல்லாமலும் விட்டுவிடும் என்பது நமக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதை மையமிட்டதுதான் “எல்.பங்கர்“ என்ற இந்தக் குறும்படம்.

பங்கர்கள் என்பது, பதுங்குகுழிகள். நீள்சதுர வடிவம், மூடிய வடிவம், திறந்து இருப்பது எனப் பல வடிவிலான பங்கர்கள் இருக்கின்றன. அப்படி ஒருவகை பங்கர்தான் இந்த “எல் பங்கர்“. அதில் மாட்டிக்கொண்ட ஒரு பெண்ணின் நிலையைத்தான் இந்தக் குறும்படம் சொல்கிறது. ஈழத்தமிழராக இந்தக் கதையைக் கேட்டால் மிகச் சாதாரணமானதாக இருக்கும். ஆனால், வெளியிலிருந்து கேட்பவரிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

எழுத்தின் வழியாக மக்களைச் சென்றடைவது, தமிழில் மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கிறது. அதனால் மாறிவரும் இந்தத் தொழில்நுட்ப காலகட்டத்துக்கேற்ப என்னுடைய கதையை காட்சி ஊடகமாகப் பதிவுசெய்யலாம் எனத் தோன்றியது. ஏனெனில், காட்சி ஊடகத்தின் வழியாக ஒன்றைப் பதிவுசெய்யும்போது அது வேறொரு பரிமாணத்தில் அதிக எண்ணிக்கையில் போய்ச்சேரும். அதனால்தான் இந்தப் புதிய முயற்சியில் இறங்கியுள்ளேன். அதுமட்டுமல்ல, கலையின் வடிவாகச் சொல்லப்படும் உண்மை, உலகத்தில் பெரிய தாக்கத்தை




ஏற்படுத்தும் என்று நம்புபவன் நான். என்னளவில் உலகில் என்னவிதமான கலைகள் இருக்கின்றனவோ, அவை அனைத்திலும் நான்பட்ட துயரத்தைப் பதிவுசெய்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படித்தான் யூத இன அழிப்பு தொடர்பாக, இரண்டாம் உலகப்போர் தொடர்பாக திரைப்படங்கள் இன்னும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவை வெற்றியும் பெறுகின்றன. ஆனால், மாபெரும் அழிவுகளைச் சந்தித்த ஓர் இனம். சூரியன் உதிக்கும் நாட்டிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் நாடு வரை பரவிவரும் ஓர் இனம். நூற்றாண்டுப் பிரச்சினைகளைச் சுமந்து திரியும் ஓர் இனம். அதன் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டவர்களால் பதிவுசெய்யப்படாமல் அந்த இனம் சந்தித்த வலி, இழப்பு என எதுவும் இந்த உலகத்துக்குக் கொண்டுசேர்க்கப்படாமல், அப்படிக் கொண்டு சேர்க்கப்பட்டவையும் அவற்றைக் கொச்சைப்படுத்துபவையாக வைத்திருக்கிற இனத்தின் அவல உண்மையை வெளியே கொண்டுவந்த படைப்புகள் எவையும் இல்லை. ஏனென்றால், இந்தப் போரால் குணா கவியழகன் பெற்ற அனுபவம் என்பது வேறு, எனக்கு அது கொடுத்த அனுபவம் என்பது வேறு. நாங்கள் பதிவுசெய்யும்போது அதை அப்படியே வெளியில் கொண்டுவர முடியவில்லை எனும்போது அதைக் கேள்விப்பட்டவர்களால் எப்படிக் கொண்டுவர முடியும்? அனைவரும் பதிவுசெய்யும் வலி ஒன்றுதான். அதை எங்களைத் தவிர வேறு யாராலும் அவ்வளவு நுட்பமாகப் பதிவுசெய்ய முடியாது என்று நம்புகிறேன்.

எனவேதான் என்னுடைய எழுத்தில் போர்க் கதைகளை எழுதிக்கொண்டிருந்த நான், அடுத்தகட்ட நகர்வின்போதும் போர்க் கதைகளையே கதையாகவும் களமாகவும் எடுத்துக்கொண்டுள்ளேன். இதற்கெல்லாம் ஒரே ஒரு காரணம், நான் என்னுடைய வாழ்க்கையில் போர் தந்த வலியைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன் என்பதால்தான். எழுதும்போது ஏற்பட்டதைவிட, பலமடங்கு பெரிய சிக்கல்களை குறும்படம் இயக்கும்போது சந்தித்தேன். அப்போது யாவரும் பதிப்பகத்தார்தான் “யாவரும் திரை’ என்ற ஒன்றை உருவாக்கி இந்தக் குறும்படத்தின் தயாரிப்புச் செலவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் சரியான நேரத்தில் எனக்கு உதவவில்லை என்றால், இது இப்போது சாத்தியமாகியிருக்காது.

(18ஆம் பக்கம் பார்க்க)



■ தேவமுகுந்தன்

# அசோகன் கொழும்பில இருக்கிறான்...!

**வீடு** குழம்பிப் போயிருந்தது. முதலாவது அறையை ஒதுக்கி சேந்தனின் குடும்பத்திற்குக் கொடுத்ததில், இவனது குடும்பத்தவர் எல்லோரும் இரண்டாவது அறையையே பயன்படுத்த வேண்டியிருந்தது.

இப்போது இரண்டாவது அறையிலிருக்கும் சாமான்களை எடுத்து முதலாவது அறைக்குள் அடுக்க வேண்டியுள்ளது. இனி இரண்டாவது அறையைத் துப்பரவாக்க வேண்டும்.

குனிந்து, நிமிர்ந்து வேலை செய்ய முதுகு உளைந்தது. வியர்த்துக் கொட்டியது. அவர்களை ஊருக்கு அனுப்ப அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து இரத்மலானை விமான நிலைத்திற்குச் சென்றிருந்தான். இப்போது நித்திரை தூக்கியடிக்கின்றது. வருடாந்தம் சுமார் பத்துப் பன்னிரண்டுதரம் இப்படிப்பட்ட வேலைகள் வந்து சேர்ந்து விடுகின்றன. மகனும் மகளும் பாடசாலைகளிலிருந்து இரண்டு மணிக்குப் பின்புதான் வருவார்கள். மனைவி வர ஐந்து மணியாகும். இந்த வேலைகளை முடித்து பத்தரைக்கு முன்பு அலுவலகத்துக்கு போய்ச் சேர்ந்தால் 'ஷோர்ட் லீ'விலை சமாளிக்கலாம். இல்லாவிட்டால் அரைநாள் லீவு போடவேண்டியிருக்கும். லீவுகள் முடிந்து கொண்டிருக்கின்றன.

வந்தவர்களை விமான நிலையத்திலிருந்து கூட்டிவர ஒருநாளும், அவர்களுடன் வங்கி, பொலிஸ் நிலையம், கடைகள் என்று திரிய இன்னொரு நாளுமாய் இரண்டு நாட்கள் 'லீ'வெடுத்தாயிற்று. இன்னும் இரண்டு வாரத்தால் அவர்கள் திரும்பி வரும்போது, கூட்டித்திரியவும் கட்டுநாயக்காவுக்குப் போகவுமாய் இரு நாட்கள் லீவு எடுக்க வேண்டி வரலாம்.

● ● ●

அவனது வீடு ஊரிலோ வெளிநாடுகளிலோ இல்லாமல் இடையில் கொழும்பில் இருப்பதனால்தான் இந்தச் சிக்கல். இரண்டு அறைகளையும் கூடத்தையும் சமையல் அறையையும் கொண்ட இந்த வாடகை வீட்டில் வேறு ஆட்கள் தங்குவதென்பது சிரமம்தான். பிள்ளைகளின் படிப்புக் குழம்பும். இவனது எழுத்து வேலைகள், வாசிப்புக்கள் குழம்பிப் போகும். தனிப்பட்ட சுதந்திரம் தொலைத்தவர்களாக இவர்கள் நான்கு பேரும் அந்த நாட்களில் உணர்வார்கள்.

வருபவர்களை பொலிஸில் பதிவு செய்வதற்காக அவர்களையும் வீட்டுச் சொந்தக்கார பெரேராக் கிழவனையும் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு அலைய வேண்டும். பெரேராக் கிழவன் முகம் சுழிப்பான், புறுபுறுப்பான். அந்த மாத வாடகையைச் செலுத்தும்போது



இரண்டாயிரமோ, மூவாயிரமோ கூடுதலாக அவனுக்கு கொடுக்க வேண்டியிருக்கும். அடுத்த மாதப் பட்டியல்கள், நீர் அளவீட்டுமானியும் மின்சார அளவீட்டுமானியும் சிக்கன எல்லைகளைத் தாண்டிச் சுற்றியிருப்பதைத் சுட்டிக் காட்டும். தொலைபேசிக் கட்டணம் உயர்ந்திருக்கும். அடுத்த மாதச் செலவுகள் கையைக் கடிக்கும்.

இவற்றைத் தவிர்க்கவே அசோகன் முயற்சிக்கிறான். ஆனால் தவிர்க்க முடியாமல் தடுமாறுகிறான். வெளிநாடுகளில் இருக்கும் இவனது - மனைவியினது நெருங்கிய உறவினர்கள்-சிறுவயதில் ஒன்றாய்ப் படித்த- விளையாடிய நண்பர்கள் எந்தவொரு தொடர்புமற்று இருப்பார்கள். இலங்கைக்கு வருவதற்கு ஓரிரு வாரத்திற்கு முன்பு திடீரென தொலைபேசியில் அன்பொழுகக் கதைக்கத் தொடங்கி பின்னர் தாங்கள் இலங்கைக்கு வரும் தினம், விமானத்தின் இலக்கம் என்பவற்றைக் கொடுத்து கட்டுநாயக்காவில் வந்து தங்களைக் கூப்பிடும்படி கூறுவார்கள்.

● ● ●

மகனின் புத்தக மேசையை இழுத்து வந்து முதலாவது அறைக்குள் வைத்தவன், புத்தகங்களை அள்ளிக் கொண்டுவந்து அதில் குவித்தான். இனி மகளின் மேசையை இழுத்து வரவேண்டும். பாடசாலைகளில் பெற்றோர் -ஆசிரியர் சந்திப்புக் களில் ஆசிரியர்கள், பிள்ளைகள் வீட்டுவேலைகளை ஒழுங்காகச் செய்து வருவதில்லை- வீட்டில் படித்துக் கொண்டு வருவதில்லை என இவனிடம் முறைப்பாடுகள் செய்வார்கள். இவனால் பிள்ளை களைக் கண்டிக்க முடிவதில்லை. தனது வீட்டில் படிக்கும் சூழல் இல்லையென்பதை ஆசிரியர் களிடம் சொல்ல இவனுக்கு வெட்கமாக இருக்கின்றது.

வருபவர்கள், தங்களுடன் இவர்கள் முழுநேரமும் இருந்து கதைக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் வீட்டில் இருக்கும்போது, மகனோ, மகளோ தங்கள் வீட்டுப் பாடங்களைச் செய்வதற்காகப் புத்தகம் கொப்பிகளை எடுத்தால், 'இவரின் மகனுக்கு பெரிய லெவல் எங்களோடை சேருறான் இல்லை. எந்த நேரமும் புத்தகங்களோடை இருக்கிறான்.' என்றோ 'மகளுக்கு தான்தான் பெரிய படிப்புப் படிக்கிறா என்ற நினைப்பு, எங்களைக் கணக்கெடுக்கிறா இல்லை' என்றோ ஊரிலுள்ள உறவினர்களுக்கு சொல்வார்கள்.

'இஞ்சத்தைப் படிப்பு 'ஸ்ராண்டட்' காணாது. அங்கை என்றால்...' என்று தங்கள் பெருமைகளை வீட்டுப்பாடம் செய்ய கொப்பியையும் பேனாவையும் எடுக்கும் பிள்ளைகளிடம் விளக்கத் தொடங்குவார்கள். பிள்ளைகள் கொப்பி, புத்தகங்களை மூடிவைத்து விட்டு கொட்டாவி விட்டபடி அவர்களின் அலட்டல்களைக் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்க இவனுக்குத் தர்ம சங்கடமாயிருக்கும்.

● ● ●

சாப்பாட்டு மீதிகள், சிகரெட் அடிக்கட்டைகள், ரொபி மேலுறைகள்... என குப்பைகள் அறையினுள்ளே பரவியிருந்தன. அடிக்கடி கனடா நாட்டின் சுத்தத்தையும் அங்குள்ள மக்களின் பழக்கவழக்கங்களையும் பெருமை பொங்கக் கதைக்கும் அவர்களுக்கு கழிவுப் பொருட்களை குப்பைக் கூடைக்குள் இடவேண்டுமென்ற அடிப்படைப் பண்பு கூட இல்லாதது இவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

இவனது குடும்பத்தவர் கொதித்தாறிய குழாய் நீரையே வழமையாகப் பருகுவார்கள். அந்த நீர் சுத்தமானதல்ல என்று சேந்தன் ஆட்கள் கருதியதால் இவன் போத்தலில் அடைக்கப்பட்ட 'மினரல் வோட்டர்' வாங்கி வைத்திருந்தான். அப்படியெல்லாம் சுத்தம் பார்த்தவர்களின் குப்பைகளை அள்ளி பெரிய கறுப்பு நிற பொலித்தீன் பையில் இட்டுக்கட்டி வெளிவாசலில் வைத்தவன், ஈரத் துணியால் நிலத்தைச் துடைக்கத் தொடங்கினான்.

இவனது வீட்டிலுள்ளோர் வீட்டுக்குள் காலணிகள் அணிவதில்லை. ஆனால் வெளிநாடுகளில் இருந்து வருவோர் குளியலறை, மலகூடம், சமையல் அறையென வீடு முழுதும் இறப்பர் செருப்புக்களை அணிந்தபடி திரிவார்கள். அவர்களுக்கு ஒன்றும் சொல்ல முடியாது.

● ● ●

கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான பாதை மூடப்பட்ட பின்னர் வெளிநாடுகளில் வசிப்போர், கொழும்புக்கு வந்து 'கிளியரன்ஸ்',விமானப் பயணச்சீட்டு என்பவற்றைப் பெற்றே யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளது. இதற்காக அவர்கள் கொழும்பில் ஒரு வாரமளவில் தங்க வேண்டியுள்ளது. அவர்களிடம் இருக்கும் வசதிக்கு பெரிய நட்சத்திர விடுதிகளில் கூடத் தங்கலாம். ஆனால் உறவினர், நண்பர்கள் வீடுகளிலேயே தங்குகின்றனர். கொழும்பில் தங்கள் தேவைகளுக்காக, பல இடங்களுக்குக் கூட்டிச் செல்ல நண்பர்கள், உறவினர்களை அழைக்க இது வசதியெனக் கருதுகிறார்கள்.

● ● ●

சேந்தன் இவனது உறவினன். தூரத்து உறவுவழியில் சகோதரன் முறை. சமவயதினன். உறவினன் என்பதிலும் பார்க்க இருவரும் நண்பர்களாகவே பழகியிருக்கிறார்கள். சிறுவயதில் ஒன்றாக விளையாடித் திரிந்தவர்கள். சேந்தன் பத்தாம் வகுப்புக் கடைசியில் கனடா போனதன் பின்னர் அவனுக்கும் இவனுக்கும் தொடர்பறுந்து போயிருந்தது. பதினெட்டு வருடங்களாக எந்தத் தொடர்புமில்லாதிருந்த சேந்தன், திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் அடுத்த வாரம் குடும்பத்துடன் இலங்கை வருவதாகவும் தங்களை கட்டுநாயக்காவுக்கு வந்து கூட்டிச் செல்லுமாறும் கூறி விபரங்களைக் கூறிபோது இவனால் மறுக்க முடியவில்லை.

இந்த வீட்டில் மேலதிகமாக ஒருவரை தங்க வைப்பதே சிரமமானபோது நால்வரைக் கொண்ட சேந்தனின் குடும்பத்தினரை தங்க ஒத்துக் கொண்டது தவறெனப் புரிகின்றது. ஆனால் மறுத்திருந்தால், அசோகன் இப்ப மாறிப் போய்விட்டான் என்று சேந்தன் பலரிடம் சொல்லித் திரியலாம். (18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# இன்னொரு பட்டாம்பூச்சி

ஆண்டுக்கு ஆண்டு "மிஸ் வேர்ள்ட்" என்று போட்டி வைத்து பல நாடுகளின் வண்ணத்துப்பூச்சிகளை நமக்கு அறிமுகப்படுதுகிறார்கள். "ஐம்பது கிலோ தாஜ்மஹால்" ஐஸ்வர்யா இப்படித்தான் நமக்கு அறிமுகமாகினார். இந்த ஆண்டு தெரிவாகி இருப்ப வர் 26 வயதான மெக்ஸிக்கோ நாட்டு அழகி. பெயர் வனெஸ்ஸ.

118 அழகிகள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் இரண் டாவது இடம் மிஸ் தாய்லாந் தாக தெரிவாகிய அழகி லிம்சுனுக்கான் என்பவர் பெற் றுள்ளார் . மூன்றாவது இடம் உகண்டா அழகியான அபெனாக்கியோவுக்கு போயிருக்கிறது. சர்வதேச வர்த்தகத்தில் பட்டம் பெற்றவர், விளையாட்டுத் துறைகளில் ஆர்வமாக பங்கேற்பவர், சமூக சேவையாளர் என்கிற முறையில், வெறும் உடல் அழகுக்காக மாத்திரம் வனெஸ்ஸ தெரிவாகவில்லை என்பது தெரிகின்றது.

முதற்தடவையாக தன் தாய் நாடான மெக்ஸிக் கோவிற்கு ஓர் உலக அழகியைப் பெற்றுக் கொடுத்த பெருமை இவரைச் சேர்கின்றது. இந்தப் போட்டிகளில் வருடா வருடம் நடப்பதுபோல, 2017இன் அழகியான மனுஷி சிலார்(இந்தியர்) நடப்பு ஆண்டு அழகிக்கு தன் முடியை அணிவித்திருக்கிறார். இந்த ஆண்டு சீனாவின் சன்வா என்னும் இடத்திலேயே இந்த அழகித் தெரிவு இடம்பெற்றது.

**அழகியல் பூங்காவில் ஓர் எழில் மலர்!**







# 28 வருட கூந்தல் அழகி

5 வயதில் தலைமுடி கத்தரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்த அடுத்த 28 வருடங்கள் அவளது கூந்தலை எந்த விதத்திலும் கத்தரிக்கவில்லை. இன்று 33 வயதாகி விட்ட உக்ரெயின் அழகி அலேனா கிராவச்செங்கோவின் கதைதான் இது.

இவரது தலைமுடியின் நீளம் இப்பொழுது சுமாராக 2 மீற்றர் வரை வந்துவிட்டது. நடக்கும்போது, சில சமயங்களில், கால் கூந்தலை மிதிக்க, இடறிவிழும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்கிறார் இந்த நீள கூந்தலழகி. இரட்டைப் பிள்ளைகளுக்கு தாயான இவர் வர்த்தகத் துறையில் முக்கிய பிரமுகர். 3 வாரங்களுக்கு ஒரு தடவை, முழுகுவதுதான் கூந்தலைச் சீராக வைத்திருப்பதின் இரகசியம் என்கிறார்.

இருபதுகளில் இடுப்பு வரை நீண்டிருந்த கூந்தல், முப்பதுகளின் ஆரம்பத்தில், முழந்தாளைக் கடந்து, தரையைத் தொட ஆரம்பித்து விட்டதாம். கூந்தலே தனது அடையாளமாகி விட்டதால், நீண்ட கூந்தல் இல்லாத அலீனாவை நினைத்துக்கூடப் பார்க்க முடியாமல் இருக்கின்றது என்கிறார்.

**கூந்தல் அழகு மட்டுமல்ல அடையாளமும்தான்...!**



# கொள்ளுப் பாட்டியின் கொண்டாட்டம்

வயதோ 102. ஆனால், 4300 அடி உயரத்தில் இருந்து குதிக்கிறார் இந்தக் கொள்ளுப்பாட்டி. ஐம்பதைக் கடந்தாலே நம் ஊர்ப் பெண்களை மூதாட்டிகள் என அழைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அறுபது எழுபதுகளில், இங்குள்ள ஆணோ, பெண்ணோ உடல் ஆரோக்கியத்தில் அவ்வளவாக ஜொலிப்பதில்லை என்பதும் உண்மைதான்.

அவுஸ்ரேலியரான ஐரின் ஒஷியா என்ற இந்த 102 வயதுப் பாட்டியோ, வானத்திலிருந்து, பரசூட் அணிந்து குதிக்கும் "ஸ்கை டைவிங்கை' இரண்டாவது தடவையாகச் செய்திருக்கிறார். 2016 இல் தனது 100வது பிறந்த தினத்தின்போது, முதற் தடவையாக "ஸ்கை டைவிங்" செய்திருந்தார். 102 வருடங்களும் 194 நாட்களும் ஆன இவர், மணிக்கு 140 கி.மீற்றர் வேகத்தில், காற்றைக் கிழித்துக் கொண்டுஆகாயத்திலிருந்து குதித்துச் சாதனையாளராகி இருக்கிறார்.

எப்படி இருந்தது அனுபவம் என்று கேட்டபோது, குப்பென்ற குளிர் காற்று முகத்தில் ஓங்கி அறைந்தாற்போன்று இருந்தது என்று 'கூலா'கச் சொல்கிறார் இவரின் மகளின் உயிரைப் பறித்த பொல்லாத வியாதியால் பீடிக்கப்பட்டவர்களை மீட்கும் நோக்கில் பணம் சேகரிக்கவே இவ்வாறு ஆகாயத்திலிருந்து குதிக்கிறாராம் கொள்ளுப்பாட்டி.

மனதில் தில் மட்டும் போதும்! சாதனைக்கு வயது எதற்கு...?



# நூறாவது வயதில் சிறந்த பரிசு!

1917இல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் ஆளுகைக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது பின்லாந்து. அதற்கு முன்பு ஆறு நூற்றாண்டு காலம் இந்த நாடு சுவீடனின் ஆளுகைக்குள் இருந்தது. சுதந்திரக் காற்றைச் சுவாசித்து, 100 வருடங்களை நிறைவு செய்து விட்ட இந்த நாடு, அதன் ஞாபகார்த்தமாக தனக்குத்தானே ஒரு பரிசளிக்க முடிவெடுத்தது. அது என்ன தெரியுமா? ஒரு நவீன நூலகம்.

20 வருட காலமாகத் திட்டமிட்டு கட்டியெழுப்பிய இந்த நவீன நூலகத்தைப் பொது மக்களுக்காக டிசம்பர் 5இல் திறந்து வைத்துள்ளார்கள். மரப் பலகைகளும், கண்ணாடிகளும் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அழகிய நூலகம், நகரின் மத்தியில் நாடாளுமன்றத்திற்கு முன்பாக அமைந்துள்ளது. இங்கு சுமார் ஒரு இலட்சம் நூல்கள் வரை உள்ளன. சினிமா மண்டபம், இசைக்கூடம், முப்பரிமாண அச்சியந்திரங்கள் என்று பல இலவசங்கள் பொதுமக்களின் பாவனைக்காகவும், பார்வைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

வாசகர்கள் திருப்பிக் கொண்டு வரும் புத்தகங்களைச் சேகரித்து, லிப்ட்களில் ஏறி இறங்கும் றோபோக்களை இங்கே காணலாம். "ஓடி" என்று அழைக்கப்படும் இந்த நூலகத்திற்கு தினமும் 10,000 வரையிலானவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். பொதுவாக நூலகங்களில் அமைதி காக்க வேண்டும் என்றாலும் இங்கு அது அவசியமில்லை. சந்திப்பு நிலையம்தானே?

இன்னொரு கொசுறு தகவல்...! 55 இலட்சம் பேர் வாழும் இங்கு 4 கோடியே 80 இலட்சம் புத்தகங்கள் இரவல் எடுக்கப்படுகின்றனவாம்!

**இவர்கள் வாசிப்பு வெறியர்கள்தான்...!**



# குரங்குகளுக்கு உணவு கொடுக்கிறீர்களா...?

"ஓர் ஆய்வின்படி ஒரு நாளைக்கு உலகம் முழுவதும் 6,000 குரங்குகள் ஏதாவது ஒரு வகையால் பாதிக்கப்படுகின்றன."

## ஒரு நிமிடம்...!



அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மாகாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கேசி சூர் மற்றும் எரிக் மில்லிகின் ஆகிய இரு மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'குரங்குகள் தினம்' ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 ஆம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. இத்தினத்தில் உலகம் முழுவதும் குரங்குகளின் பாதுகாப்பு மற்றும் அரிய வகை இனங்கள் பற்றி மக்களுக்கு விலங்கு நல ஆர்வலர்களால் பிரசாரம் செய்யப்படும்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பது மெஞ்ஞானமும், விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்ட விடயம். மனிதர்களுக்கும், குரங்குகளுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. அவற்றின் சில பரிணாமம் கழித்துத்தான் மனிதன் தோன்றினான். முகம், உள்ளங்கை உள்ளங்கால்களில் தவிர உடல் முழுவதும் ரோமம் நிறைந்த விலங்கு குரங்கு. கூட்டமாக வந்து மனிதனை சில நொடியிலேயே குஷிப்படுத்திவிடும்.

குரங்கு ஒரு பாலூட்டி விலங்கு. குரங்குகளில் 14 முதல் 16 சென்ரிமீற்றர் வளரும் சிறிய குரங்கிலிருந்து, ஒரு மீற்றர் உயரம் வரை வளரும் பெரிய குரங்குகள் வரை உள்ளன. குரங்குகள் ஓர் அனைத்துண்ணி. பழங்கள், இலைகள், தானியங்கள், கொட்டைகள், பூக்கள், பூச்சிகள், சிலந்திகள், முட்டைகள், பிற உயிரினங்களைக்கூட குரங்குகள் உண்கின்றன. குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உண்டு. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் இணைக்கிறது.

குரங்குகள் மரத்திலும், நிலத்திலும், காடுகளிலும், மலைகளிலும் வாழ்கின்றன. சரி, நம் நாட்டு குரங்குகளின் நிலை தற்போது எப்படி இருக்கிறது?

நம் நாட்டின் சரணாலயப் பகுதிகள், கதிர்காமத்திலும் வன்னிப் பிராந்தியத்திலும் வாழ்கின்றன. பெரும்பாலும் உயரமான மரங்களில் உச்சியில் வாழ்கின்றன. காடுகளை அண்டிய பகுதிகளில் வாழும் குரங்குகள் வாழ்க்கைப் போராட்டத்தில் இருக்கின்றன. அதன் வாழிடங்களை மனிதர்கள் சூறையாடியதால் நகர்ப்புறங்களிலும், வீதிகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

காரணம், நாம் அங்குள்ள மரங்களை வெட்டி அதற்குப் பதிலாக கட்டடக் காடுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அத்தோடு அவை விரும்பிச் சாப்பிடும் பழ மரங்களை அழிப்பதால் அதன் உணவுச் சங்கிலியும் மாறிவிடுகிறது. தேவையில்லாத பொருட்களைச் சாப்பிடுவதால் சமிபாட்டுப் பிரச்சினை, நோய்த் தொற்று போன்றவற்றால் சில குரங்குகள் உயிரிழந்தும் விடுகின்றன.


சுற்றுலா வருகின்ற மக்கள், அவற்றுக்குப் பழக்கம் இல்லாத பொருள்களைக் கொடுப்பதால் உணவுப் பழக்கமும் மாறுகின்றன. குரங்குகள் ஒரு தடவை உப்பு மற்றும் மசாலா சுவைகளுக்கு பழகிக் கொண்டால் அடுத்த முறையிலிருந்து ருசியான பொருள்களையே சாப்பிட ஆரம்பித்துவிடும். இப்பழக்கம் நீடிக்கவே, பின்னர் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பிடுங்கிச் சாப்பிட ஆரம்பித்து விடுகிறது. சில நேரங்களில் பிடுங்கிற பழக்கம் உச்ச கட்டத்தையும் அடையும் எனலாம். இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது பெரும்பாலும் குரங்குகளையே நாம் குற்றம் சாட்டுவோம். ஆனால், உண்மையில் தவறு நம் மீதுதான்.

இன்னும் வவுனியா, கிளிநொச்சி நகரங்களை அண்டிய பகுதிகளில் குரங்குகள் வீடுகளுக்குள் புகுந்து பொருள்ளையிட்டுச் செல்கின்றன. அதனுடைய வாழிடத்தையும், உணவுப் பழக்கத்தையும் அழித்து விட்டோம். அதனால் அதற்குத் தேவையான பொருள்ளை அவை காட்டுக்கு வெளியிலிருந்து எடுத்துக்கொள்கின்றன. காட்டைவிட்டு வீதிகளுக்கும் வருகின்றன. ஓர் ஆய்வின்படி ஒரு நாளைக்கு உலகம் முழுவதும் 6,000 குரங்குகள் ஏதாவது ஒரு வகையால் பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வீதியில் நடக்கும் விபத்துகள், உணவு முறை மாற்றம், மக்கள் சில நேரங்களில் வன்முறையைக் கையாளுதல் போன்றவற்றால் இந்நிகழ்வுகள் ஏற்படுகின்றன.

இங்கு சாலை விபத்தால் பாதிக்கப்பட்ட உண்மை நிலையைப் பதிவு செய்கிறேன். சில நாள்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் நடந்த வீதி விபத்து ஒன்றில் ஒரு குரங்கு அடிப்பட்டு விட்டது. அதன் தாய் மூன்று நாள்களாக தன் இரத்தம் வழிந்த குட்டியை வீதியோரத்திலேயே வைத்துக் கொண்டு எங்கும் செல்லாமல் இருந்தது. இக்காட்சி பார்ப்போரை நெகிழச் செய்தது. இதற்கு முக்கியக் காரணம் வீதியோரங்களில் தின்பண்டங் களை வீசுவதால் அதை எடுக்க வீதியைக் கடப்பதுதான்.

வனவிலங்குகளுக்கு உணவு கொடுப்பது தவறு. அதை மீறிக் கொடுப்பதால் சில உயிரினங்கள் இறக்க நேரிடுகின்றன. இதைத் தடுக்க அரசாங்கமும் வனத்துறை யும் கடுமையாக முயற்சிகள் மேற்கொண்டால் இது போன்ற சம்பவங்களிலிருந்து அவற்றைக் காப்பாற்றலாம் என்பது வன விலங்கு ஆர்வலர்களின் கோரிக்கை. ஏற்கனவே அவற் றின் இருப்பிடத்திற்கு ஆபத்து விளைவித்துவிட்டோம் இப்படி உணவுகள் கொடுத்து பழக்கப் படுத்தி அவற்றின் இருப்பிற்கும் ஆபத்து ஏற்படுத்திவிடக் கூடாது. இதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.







# கழிவு

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு
இக்கட்டுரை பிரசுரமாகிறது

தேத்தண்ணி குடிக்க தேயிலைத் தூள் எங்க வாங்குவீங்க?

தோட்டத்துல குடுப்பாங்க.

மாசம் சம்பளத்துல கழிச்சிக்குவாங்களா?

இல்ல, சும்மாதான், ஒரு கிலோ குடுப்பாங்க.

மாசம் முழுசா போதுமா?

இல்ல, மாசம் முடியறதுக்கு முன்னாடியே தூள் முடிஞ்சிரும். அங்கர் பக்கட் வாங்கினா பாதி மாசத்திலேயே முடிஞ்சிரும். அதோட காலையில அந்திக்கு, வேலைக்குனு தேத்தண்ணி கொண்டுபோவோம். அதனால மாசம் முழுசா பாவிக்க முடியாது. முடிஞ்சோன கடையிலதான் வாங்குவோம்.

என்ன தேயில குடிக்கிறீங்க?

என்ன தேயிலனு தெரியாது.

அந்த தேயிலை தூள் பெயர் தெரியுமா?

டஸ்ட்டுன்னு சொல்றாங்க.

நீங்க எடுக்குற கொழுந்துல என்னென்ன வகையான தேயிலைத்தூள் செய்றாங்கனு தெரியுமா?

ஒன்னு ரெண்டு தெரியும்.

கண்டிருக்கீங்களா?

இல்ல.

ஒரு நாளாவது குடிச்சிருக்கீங்களா?

(சிரிக்கிறார்)

குடிக்க ஆசை இருக்கா?

(மீண்டும் சிரிக்கிறார்)

(இது பதுளை தேயிலைத் தோட்டத் தொழிலாளிக்கும் கட்டுரையாளருக்குமான உரையாடல்)

ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் ஒரு நாளைக்கு கட்டாயம் 18 கிலோ தேயிலை பறித்தாக வேண்டும். அது மழைக்காலமாக இருந்தாலும் கடும் வெயிலாக இருந்தாலும் 18 கிலோ கூடையில் நிறைத்தாக வேண்டும். அப்படி எடுக்கத் தவறும் பட்சத்தில் 140 ரூபாவை அந்தத் தொழிலாளி இழக்கவேண்டி ஏற்படும்.

"நாங்கள் பறிக்கும் கொழுந்து நிறையிலிருந்து 3 முதல் 6 கிலோ வரை நிர்வாகத்தினர் கழிக்கிறார்கள். கொழுந்து பறிக்கும்.இடத்திற்கே லொறி மூலம் வந்து கொழுந்தை எடுத்துக்கொண்டு போவதால் போக்குவரத்து செலவு என்ற அடிப்படையில் இவ்வாறு செய்கிறார்கள். ஒரு சில சந்தர்ப்பங்களில் கூடுதலாக கொழுந்து பறித்தால் ஒரு நாளைக்கு 8 கிலோக்கள் எங்களது அட்டையில் பதிவாகாது.

"அத்தோடு, மழைக்காலங்களில் நீர் இலைகளில் தங்கியிருப்பதால் கொழுந்தின் நிறை அதிகமாக இருக்கும் என்று கூறியும் இதே மாதிரி நாங்கள் எடுக்கும் கொழுந்தின் அளவைக் குறைக்கிறார்கள்.

"இப்படி அளவு குறைத்து சேகரிக்கப்பட்ட கொழுந்தை லொறி வரும் வரை கொழுந்து பைகளில் நிரப்பி வைத்திருப்போம். நீண்ட நேரத்தின் பின்னர் வரும் லொறி மூலம் கொண்டு சென்று தொழிற்சாலையில் மீண்டும் நிறையை அளவிட்டுப் பார்ப்பார்கள். அப்போது நிறை குறைந்திருப்பதாகக் கூறி மீண்டும் மாலை நேரம் எடுக்கும் கொழுந்தில் மேலதிகமாகவும் கழித்துக் கொள்வார்கள். கேட்டால் துரை சொல்வதைத்தான் செய்யவேண்டியிருக்கிறது என்று ஐயாமார் கூறுவார்கள்" - நாளாந்தம் தான் எவ்வாறு சுரண்டப்படுகிறேன் என்பதை விளக்கமாகக் கூறுகிறார் மஸ்கெலியாவைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர்.

இவ்வாறு தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி இலங்கையில் 20 தொடக்கம் 23 வரையிலான தேயிலைத் தூள் வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றுள் 16 வரையிலான தேயிலைத் தூள்கள் தரமானதாகவும் மீதியானவை தரம் குறைந்தவையாகவும் தரம் பிரிக்கப்படுவதாக கூறுகிறார் பதுளை தோட்டமொன்றில் ஓய்வுபெற்ற தொழிற்சாலையின் பிரதான தொழிற்சாலை அதிகாரி ஜே.ஏ. எலயஸ்.

இதில் தரமான - விலைகூடிய தேயிலைத் தூளில் ஒன்றையாவது தோட்டத் தொழிலாளி ஒருவர் அருந்தியிருக்க மாட்டார். தொழிற்சாலையில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளிகள் தவிர்த்து கொழுந்து பறிக்கும் எந்தவொரு தொழிலாளியும் இந்தத் தரமான தேயிலைத் தூளைக் பார்த்திருக்கக்கூட மாட்டார்கள்.

தோட்டத் தொழிலாளிகளுக்கு தரம்குறைந்த டஸ்ட் 2 (Dust 2) தேயிலைத்தூள்தான் வழங்கப்படுகிறது. இது தரமானது என்று கூற முடியாது. சாதாரண ஹோட்டல்களுக்கும் இந்தத் தேயிலைத் தூள்தான் விநியோகிக் கப்படுகிறது. சாயம் கூடுதலாக இருக்கும். ஒரு தடவைக்கு மேல் பாவிக்கலாம். ஆனால், இவர்களுக்கு தரமான ; டஸ்ட் 1 (Dust 1) வழங்கலாம் என்கிறார் எலயஸ்.

தான் பல்வேறு தடவை நிர்வாகத்தினரிடம் இந்த வேண்டுகோளை விடுத்தபோதும் அதை அவர்கள் மறுத்து வந்தனர் என்றும் அவர் கூறுகிறார். ஆனால், இந்த விடயத்தை தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் சேர்த்து முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வரலாம் என்கிறார் எலயஸ்.

150 வருடங்களுக்கு மேலாக தேயிலை மலையில் வாழ்ந்து அதற்கே உரமாகிக் கொண்டிருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தங்களுடைய உழைப்பில் உற்பத்தியாகும் தேயிலைத் தூளை ஆடம்பரப் பொருளாக்கி அதனை நுகர முடியாத அளவுக்கு அவர்களிடமிருந்து தூர விலக்கி வைத்திருக்கிறார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்டு இவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறும் தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தில் சம்பள விடயத்தை மாத்திரமே தூக்கிப் பிடித்துக்கொண்டு அரசியல் செய்கின்றன.

தொழிற்சங்கக் கூட்டங்களின்போது இந்த விடயத்தை கூட்டு ஒப்பந்தத்தில் சேர்க்க வலியுறுத்திக் கூறுமாறு பல தொழிலாளர்களிடம் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் அவ்வாறே செய்திருக்கிறார்கள். பார்க்கலாம், செய்யலாம் என்று கூறிய தொழிற்சங்கவாதிகள் இதுவரை இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார் எலயஸ்.

நன்றி: மாற்றம்

### ஈழத்தை...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகரமுதல்வன் இவர்களுக்கு இருக்கும் புரிதல் என்பது புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கு ஏன் இல்லை என்ற கேள்வி எனக்குள் இருந்துகொண்டே இருக்கிறது. யூத இனம் அழித்தொழிக்கப்பட்டது தொடர்பாக பல படைப்புகள் வந்ததற்குக் காரணம், அந்த இனத்தின் மீது அந்த அவலத்தைப் பதிவுசெய்யவேண்டியதன் தேவையின் மீது கலைஞர்களுக்கும் அதை ஆதரிப்பவர்களுக்கும் இருந்த விருப்பம்தான். ஆனால், ஈழ இன அழிப்பு தொடர்பாக லைக்கா மாதிரியான ஈழத்தமிழர் நடத்தும் தயாரிப்பு நிறுவனம்கூட எந்த அளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் எனத் தெரியவில்லை.

ஈழ மக்களைப் பெரிய அளவில் சார்ந்திருக்கும் தமிழ் சினிமாவில் அப்படியொரு படைப்பு வருமா என்றால், அது ஒரு பெரிய கேள்விக்குறியே. இதுவரை வந்த படைப்புகளும் ஈழத்தை, ஈழ மக்களை, மொழியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொச்சைப்படுத்தி வந்த படைப்புகள்தான். காரணம், இவர்களுக்கு அந்த நிலத்தைப் பற்றியோ, அந்த நிலத்தில் நடந்தது பற்றியோ, அனுபவ அறிவில் எழுந்த படைப்புகளாக அவை இல்லை. வெறும் கேள்விப்பட்டதால் உருவானது என்பதே காரணம். அதை என்னைப் போன்ற அந்த நிலத்தில் வாழ்ந்து உணர்ந்தவர்களால்தான் சரியாகப் பதிவுசெய்ய முடியும். அதற்கான வாய்ப்பெல்லாம் கிடைக்குமா என்பதே பெரிய கேள்விதான்.

இந்தக் குறும்படத்தையே இன்னும் திறம்படச் செய்திருக்கலாம்தான். ஆனால், அந்த அளவுக்கு என்னிடம் பொருளாதாரம் இல்லை. இதைப்போல ஆயிரம் ஆயிரம் கதைகள் இருக்கின்றன. இது சமுத்திரத் தும்மலின் ஒரு துளிதான். அதைத் திரைப்படம் ஆக்குவதற்கான ஒரு துருப்புச் சீட்டாகத்தான் இதைப் பார்க்கிறேன். சரியான வாய்ப்புக் கிடைக்கும்போது இதைவிடப் பல மடங்கு வீரியமான கதையின் மூலம் இங்கே இருப்பவர்களுக்கு ஈழத்தின் கதையைச் சொல்லக் காத்திருக்கிறேன். அப்படிச் சொல்லும் என்னுடைய திரைக்கதைகள் மூலம் எங்களின் வலியை, மொழியே தெரியாதவர்களாலும் புரிந்துகொள்ள முடியும்."

### காப்பாற்றப்பட்ட...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் மஹிந்த தரப்பினரின் நாட்டைப் பிரிக்கும் பிரசாரம் ஓயப்போவதில்லை. எனவே பகிரங்கமாக எமது கோரிக்கைகளை முன்வைத்துப் பேரம்பேச ஏன் தயங்கவிட்டும்? அப்படிப் பேரம் பேசாவிட்டாலும் எதிர்ப்புப் பிரசாரத்தை மஹிந்த தரப்புக் கைவிடப் போவதில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமக்கு மக்கள் வழங்கிய ஆணைகளுக்கு அமைவாக உறுதியாகச் செயற்படுவதாக முடிவெடுக்க வேண்டும். கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

தற்சமயம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 106 வாக்குகளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 103 வாக்குகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பக்கு 14 வாக்குகளும் உண்டு. எவர் ஆட்சியமைத்தாலும் வரவு - செலவுத் திட்டம் உட்பட எந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதானாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தேவை. இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வங்கப்பட்ட இந்த சந்தியை - அதுவும் தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பாவிக்கப் போகிறதா அல்லது ஜனநாயகத்தைக் காப்பது என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றப் போகிறதா என்பதே தமிழ் மக்கள் மத்தியில் எழும் கேள்வி.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தால் அதைத் தங்களுக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் எனச் சொல்லிக் கொண்டிருப்பதிலே அர்த்தம் எதுவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக நின்றாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மஹிந்த தரப்பினர் இனவாதத்தைத் தங்கள் பிரதான பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தப் பின்னிற்கப் போவதில்லை.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களினதும் மலையக மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் ஆதரவில் தங்கிநின்றே ஆட்சியைத் தக்க வைக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் நலன்களின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகத்தைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கைவிடவில்லை என்பதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

### எம்.டி.வாசுதேவன்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமல்ல கிருஷ்ணன் மீண்டும் சொல்கிறான் 'கடோத்கஜன் காட்டுமிராண்டிதானே! அரக்ககுணமுள்ளவன், யாகத்தின் எதிரி, பிராமணர்களின் பகைவன் அவன் இப்போது இறக்கவில்லை என்றாலும் என்றாவது நாமே கொல்ல வேண்டியது வரலாம்..'

கதை முடிவில் பீமனும் ஒரு காட்டுவாசிக்குப் பிறந்தவன் என்பதை குந்தியே ஒத்துக்கொள்வாள். 'அந்தப் பயங்கரக் காட்டிலிருந்து அவர் வந்தார். அதுவும் சங்கிலி அறுபட்ட ஒரு சண்டமாருதத்தைப் போல்.. பெயர் தெரியாத ஒரு காட்டுவாசி வந்தார்' என்று பீமன் பிறந்த கதையைச் சொல்வாள்.

கிருஷ்ணனின் கூற்றையும் பீமன் பிறந்த கதையையும் இணைத்துப் பார்க்கும் போது அனைத்து திறமைகளும் கொண்ட பீமனுக்கு பாரதக்கதையின் ஒதுக்கப்பட்ட இரண்டாம் இடத்தின் வரலாறு சமூகப்பின்னணியுடன் புரியும். பீமனின் பார்வையில் ஒரு சமூகப்பின்னணியைக் குறிப்பாக உணர்த்தியிருக்கும் நாவல் 'இரண்டாம் இடம்' வாசிப்பவர்களுக்காக படைப்பாளன் விட்டு வைத்திருக்கும் பக்கங்கள் அவை. வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்லியிருக்கும் சொற்களுக்கு நடுவில் மௌனத்தில் இமயத்தின் பனிக்கட்டியாக உறைந்து போயிருக்கிறது இரண்டாம் இடத்தின் வரலாறு.

### அசோகன்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனின் குடும்பம் வந்து நின்ற நாட்களில் பிள்ளைகளுக்கு தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்த பிள்ளைகள் சிரமப்பட்டதை இவன் அவதானித்திருந்தான். வந்தவர்கள் நடுக்கூடத்தில் இருந்து தொலைக்காட்சியின் சத்தத்தை அதிகரித்து விட்டு கத்திக் கும்மாளமிட்டார்கள்.

சேந்தனின் குடும்பத்தவர்களுடன் புறக்கோட்டைக்குச் சென்றிருந்தான். சேந்தனும் மனைவியும் ஒவ்வொரு பொருளையும் வாங்குவதற்கு பேரம்பேசியது இவனுக்கு ஆச்சரிமாயிருந்தது.

சேந்தன் சிறுவனாக இருந்த காலத்தில் கொழும்பில் தொழில் புரிந்த தகப்பன் வங்கியொன்றில் அவனின் பெயரில் சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்திருந்தார். அந்தக் கணக்கை மூடி பணத்தை மீளப் பெற வேண்டுமென சேந்தன் இவனைக் கூட்டிக் கொண்டு கொட்டாஞ்சேனையில் இருந்த அந்த வங்கிக் கிளைக்கு வெள்ளவத்தையில் இருந்து பஸ்ஸில் சென்றான்.

தொடர்ச்சியாக பல வருடங்களாக நடவடிக்கைகள் ஏதுமற்றிருந்த அந்தக் கணக்கு அரசின் புதிய சட்டதிட்டங்களின்படி மூடப்பட்டு பணம் மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அசோகன் வங்கி முகாமையாளருடன் கதைத்துப் பார்த்தான். அவர் இவனுக்கு புதிய சட்டதிட்டங்களை தெளிவாக விளக்கினார். ஆனால் சேந்தன் முகாமையாளரை ஏசியபடி வந்து, இவனை மத்திய வங்கிக்கு வருமாறு கூப்பிட்டான். அங்கு சென்றாலும் இந்த பணத்தை பெறமுடியாது என்பது இவனுக்குப் புரிந்தது. ஆனால் சேந்தன் இவனை விடுவதாயில்லை. இருவரும் அங்கு போய் அலைந்ததுதான் மிச்சம்.

● ● ●

யாழ்ப்பாணம் சென்று திரும்பியவர்கள் சற்றுக் கறுத்திருந்தார்கள். பிள்ளைகளில் வாட்டம் தெரிந்தது. யாழ்ப்பாணக் காலநிலை ஒத்துவராமல் பிள்ளைகளுக்கு வருத்தம் வந்ததாகச் சேந்தன் சொன்னான். அந்த வெக்கைக்குள்ளை எப்படித்தான் மனுசர் சீவிக்கிறார்களோ என ஆச்சரியப்பட்டுக் கதைத்தான். இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பித்திருந்ததால் அசோகனின் பிள்ளைகளும் சேந்தன் குடும்பத்தினருடன் காலையில் தெகிவளை மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றிருந்தனர். மாலையில் அவர்களுடன் பொருட்கள் வாங்க பல கடைகளுக்கு அலைய வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்த - கொழும்பில் வாங்கிய பொருட்களை சேந்தன் சூட்கேஸ்களில் அடுக்கிக் கொண்டிருந்தான். அவர்களது விமானம் அடுத்தநாள் காலையில் புறப்படவிருந்தது.

● ● ●


அதிகாலையில் கட்டுநாயக்கா விமான நிலைத்துக்குச் சென்று சேந்தனின் குடும்பத்தவர்களை வழினுப்பிவிட்டு வந்தான். இனி, அவர்கள் கனடா போய்ச் சேர்ந்ததை அறிவிக்க ஒருமுறை தொலைபேசி எடுக்கக்கூடும். பிறகு அடுத்தமுறை இலங்கைக்கு வருவதற்கு ஓரிரு வாரங்கள் முன்னதாக கட்டாயம் அழைப்பு எடுப்பார்கள். இப்போது வீட்டைச் சுத்தம் செய்ய பாடசாலை விடுமுறையில் நிற்கும் பிள்ளைகள் அசோகனுக்கு உதவினர்.

தொலைபேசி ஒலித்தது. சேந்தனின் அம்மா இவனுக்கு தூரத்துப் பெரியம்மா கதைத்தார். சேந்தனாக்களை விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்ற விபரங்களை முதலில் விசாரித்து அறிந்தவர், .

'...அசோகன், நீ வடிவாக சேந்தன் ஆட்களைக் கவனிக்கேலையாம். கனகாலமாய் கொழும்பிலை இருக்கிறனீ... நினைத்திருந்தால் அவன்ரை 'பாங்' கணக்கை மூட உதவி செய்திருக்கலாமாம். உன்ரை பெண்சாதி பிள்ளைகள் அதுகளோடை வடிவாய்ச் சேரேலையாம். சொந்தக்காரன் அசோகன் கொழும்பில இருக்கிறான் என்றுதானே உன்னைத் தேடி அதுகள் வருகுதுகள்...' என்று தொடர்ந்து

'மார்கழியிலை இளையவன் வசந்தன், குடும்பத்தோடை லண்டனிலிருந்து வாறான். அதுகளை ஒருக்கா கவனமாய் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விடு ராசா' என்று முடித்தார்.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## மூக்குடைபட்ட மூர்க்கன்

இப்ப 51 நாளா தாங்களும் அரியண்டப்பட்டுச் சனத்தையும் அரியண்டப்படுத்திப் போட்டிருக்கினம் அரசியல்வாதியள். அதுக்கை மைத்திரியின்ரை பங்கு பெரிசெண்டு சொல்லினம். உண்மையா, மைத்திரி நாட்டுக்கு நல்லது செய்ய வேணும் எண்டோ? இல்லாட்டி சனத்துக்கு நல்லதைச் செய்ய வேணும் எண்டோ? மகிந்தாவைக் கொண்டு வந்து நுழைக்கேல்லை. உதிலை மைத்திரியின்ரை சொந்த அபிலாஷைக்குத்தான் நாடும் சனமும் பலியாகிப் போட்டுதுதெண்டும் சொல்லினம். கேவலங்க கெட்ட ஜென்மம். வேறை ஆர்? மைத்திரிதான். ஏற்கனவே தான் சேத்து வைச்சிருக்கிற சொத்தையும், அதை அனுபவிக்கத் தன்ரை குடும்பத்தையும் காப்பாத்துறதுக்கு ஆட்சியைக் கைப்பற்றப் பல சூட்சியளையும், ஆர்ப்பாட்டங்களையும் செய்து அந்தரிச்சுக் கொண்டு திரிஞ்ச மகிந்தாவை வலியக் கூப்பிட்டு அந்தாள் "இந்தா பிடி" எண்டு பிரதமர் பதவியைக் குடுத்தால்... அது மகிந்தாவுக்கு சுவீப் விழுந்த மாதிரி எல்லே? ஏறி இருந்து கொண்டு விடமாட்டன்... விடமாட்டன்.. எண்டு அடம்பிடிச்ச விறுத்தத்தைப் பாத்தனியள்தானே? உவரை இந்த ஜென்மத்துக்கு நாட்டுக்கு ஆகாது. உவரைப் பிரதமராக்கினால் இல்லாட்டி உவற்றை கையிலை ஆட்சியைக் குடுத்தால் என்ன நடக்கும் எண்டு நினைக்கிறியள்? இலங்கையைத் தனக்குப் பின்னாலை தன்ரை சந்ததிக்கு மட்டும் எண்டு சீவிய உருத்து வைச்சு எழுதிப் போடுவர். அதுக்கு கேடுகெட்ட சீனா ஒண்டும் அவருக்குப் பின்னாலை வால் பிடிச்சுக் கொண்டு நிக்கிது. அதுக்குத் தன்ரை காரியத்தைப் பாத்திட வேணும் எண்ட எண்ணமே ஒழிய வேறை ஒண்டும் இல்லை. சீனாவிலை உள்ள கழிவுகளைக் கொண்டு வந்து அம்பாந்தோட்டையிலை போட்டு ஒட்டிக் கிட்டி உங்காலை கிடக்கிற கஷ்டப்பட்ட ஆபிரிக்காச் சனத்துக்கு வித்துக் காசாக்க வேணும் எண்டதுதான் சீனான்ரை கரிசனை. அதுதான் மகிந்தாவைப் பிரதமராக்கின உடனை ஓடிப்போய் அந்தாளை இருக்க நிக்க விடாமல் வாழ்த்துத் தெரிவிச்சவர் சீனாக்காரன். உண்மையாய் யோசிச்சுப் பாருங்கோவன், ஒரு ஜனநாயகமில்லாமல் அதுக்கு எதிரா ஒரு காரியம் நடக்கிதெண்டு கண்டால், நீ ஒரு நல்லவன் பெரியவன் எண்டால் என்ன செய்திருக்க வேணும்? ஓடிப்போய்ச் சொல்ல வேணும் "நீங்கள் செய்யிறது சரியான அலுவலில்லை. உடனை உதைக் கைவிடுங்கோ. பார்லிமெண்ட்டிலை போய் பெரும்பான்மையை நிரூபிச்சிட்டு என்ன வேணும் எண்டாலும் செய்யுங்கோ" எண்டு சீனா சொல்லி இருக்க வேணும். இது அதை விட்டிட்டுப் போய்க் கையைக் குலுக்கி வாழ்த்துத் தெரிவிக்கிற சீனாக்காரனைப் பற்றி என்ன நினைக்கிறியள்? உவன் மனுசனோ?


மைத்திரி ஏதோ ஒரு கோளாறிலை செய்த விளையாட்டை ஆமோதிக்கப் போய் தன்ரை சுயரூபம் என்னெண்டதை உலகத்துக்குச் சீனா காட்டிப்போட்டுது.தான் இலங்கையிலை என்னத்தைத் தேடுறன் எண்டதையும் சீனா உலகத்துக்குத் தெரிவிச்சுப் போட்டுது. உது காணும். இந்த 51 நாளிலை கனபேர் தங்கடை சுயரூபத்தைக் காட்டிப்போட்டினம்.எல்லாம் கடவுளின்ரை கைங்கரியம் எண்டு சொல்லினம்.

சீனாவை நம்பித்தான் மைத்திரி உந்தச் சிலம்பாட்டைத் துவங்கினவர் எண்டுதான் சனம் சொல்லுது. கடைசியிலை பலிக்கிடாயானது ஆர்? சனந்தானே? எத்தினை கோடிக்கணக்கான காசு வீணாப்போச்சுது? கத்தியாலை ஒருத்தரை ஒருத்தர் குத்தப்போய்....மிளகாய்ச் சரையைக் கொண்டுபார்லி மெண்டுக்கைபோய்...அங்கை கிடந்த கதிரை மேசையை உடைச்சு.. போவம் தன்ரை கடமையைச் செய்ய வந்த பொலிஸ்காரரைக் காயப்படுத்தி... உந்தக் கேவலத்தை நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோளரங்கன்.**

---

# வாடகை பெயரும் வீடும்



பெரு நகரத்திற்குக் குடிபெயர்ந்தபோது
சொந்த வீட்டிலிருந்து
தனக்கான யாவற்றையும்
அம்மாவின் பழைய கைப்பையிலும்
தன்னிரு கைகளிலும்
அள்ளிக்கொண்ட மகள்
வீட்டினை லொறியில் தூக்கிவருவார்கள்
என்ற பொய்யினை
நம்பியதும் தூங்கிவிடுகிறாள்.

முதல் நாளில் அகலமாகவும் உயரமாகவும்
அடுக்கிவைக்கப்பட்ட வீட்டுச் சன்னல்களில்
திரைச்சீலைகளும் குழந்தைகளும்
தொங்கிக்கொண்டிருப்பதை
வேடிக்கை பார்த்தவளுக்கு
புதிய வீட்டின் திறக்கப்படாத கதவுகள்
கவனத்தில் வரவில்லை

'நம்ம வீடு கனமா இருந்ததால,
தூக்கிட்டுவர முடியலடா' என்ற சமாதானத்தை
உண்மையென்று நம்பியதும்
தனக்கானதொரு வீட்டினை
அதனுள் கட்டத் தொடங்கினாள்

வீடெங்கும் குழந்தைகளின்
முந்தைய மூச்சுக்காற்றின் தடங்களை
நுகர்ந்து தேடியும் கிடைக்காதவள்
தனக்கான இணையை
சுவரில் வரையத் தொடங்கியபோது
வண்ணங்கள் நிறமிழந்திருந்தன
அதன்பிறகான நாட்களில்
ஓடியதும் சத்தமிட்டதும் குற்றமானபோது
ஆண்ட்ராய்டு உலகத்துக்குள்
பதுங்கிக்கொண்டாள்

வீட்டு உரிமையாளரின் வருகையைத்
தீயசக்தியின் படையெடுப்பாக
உணர்ந்ததிலிருந்து
தன்னை அதனிடமிருந்து
தற்காத்துக்கொள்ள ஒளிந்தவளை
மீட்பது அத்தனை சுலபமில்லை

எதிர்பாராத காலிசெய்யும் அறிவிப்பில்
புது வீடும் பள்ளியும்
தேடிக் களைத்த அப்பாவிற்கு
'டோராவின் பயணங்கள்'
கதை சொல்லித் தேற்றினாள்

வீட்டைக் காலி செய்தபோது
தனக்கான யாவற்றையும்
அம்மாவின் பழைய கைப்பையிலும்
தன்னிரு கைகளிலும்
அள்ளிக்கொண்ட மகள் சொன்னாள்
'அப்பா... இந்த வீட்ட தூக்கிட்டு வரவேணாம்...
விட்டுட்டு வந்துருப்பா.'

**- ஆண்டன் பெனி**

நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 56

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

வீதியில் மட்டும் ஏராளமான விடத்தல்தீவு மக்கள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் நகர்ந்துகொண்டிருந்தனர்.

எங்கே போவது, என்ன செய்வது, அடுத்தவேளை உணவுக்கு என்ன வழி என்பதைப் பற்றிய எந்தவித தெளிவுமில்லாமலே, அவர்கள் உயிரை மட்டும் காக்கும் ஒரே நோக்கத்துடன் போய்க் கொண்டிருந்தனர். மன்னார் வளைகுடா மீன்பிடி, பள்ளிமுனை அட்டை குளிப்பு என மிகவும் செல்வாக்காக வாழ்ந்தவர்கள் விடத்தல்தீவு மக்கள். அவர்கள் பிரமாண்டமான தேவாலயங்களையும், பள்ளிவாசல்களையும் கட்டி தங்கள் மத நம்பிக்கைகளின் விசுவாசத்தை வெளிப்படுத்தியிருந்தவர்கள். அந்த இடம் மிகவும் நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் தங்களுக்கென வசதியான வீடுகளைக் கட்டியிருந்தனர்.

போர் பள்ளிமுனையை நெருங்கியபோதும் அவர்கள் பிடிவாதமாக இடம்பெயர மறுத்துவிட்டனர். இப்போது கிபீர், மிக் விமானங்களுக்கு உயிர்களையும் பலி கொடுத்து உடைமைகளையும் கைவிட்டு வெறுங்கையுடன் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் ஊரிலிருந்து எழும் கரும்புகை மண்டலத்தை ஏக்கத்துடன் திரும்பத் திரும்பப் பார்த்தவாறே நடந்தனர். குருதியைக் கொதிக்க வைத்த அந்த வெயிலை விட அவர்களின் பெருமூச்சு பலமடங்கு வெப்பமாயிருந்தது.

அவன், முழங்காவிலுக்கு வந்து சேர்ந்த போது பிள்ளையார் கோவில் முன்றல், பொதுநோக்கு மண்டபம், பாடசாலை எல்லாமே மக்களால் நிரம்பி வழிந்தன. பாடசாலை அதிபர் பிள்ளைகளின் மதிய உணவுக்காக வழங்கப்பட்டிருந்த அரிசி, பருப்பு போன்ற பொருட்களின் ஒரு பகுதியைக் கொடுத்திருந்தார். பெரியதொரு கிடாரத்தில் சோறு அவிந்து கொண்டிருந்தது. அந்த ஊர் மக்கள் கத்தரிக்காய், வாழைக்காய் என்பவற்றைக் கொண்டுவந்து சாம்பார் செய்வதற்காக வெட்டிக் கொண்டிருந்தனர்.

முத்தையா தன்னிடமிருந்த தேயிலை, சீனி என்பன முடியும் வரை வந்தவர்களுக்கு தேநீர் போட்டுக் கொடுத்தார். அந்தப் பெருந்தொகை மக்களில் ஒரு சிறு பகுதியினரை மட்டுமே அவரால் திருப்திப்படுத்த முடிந்தது. சுந்தரம், வேலுப்பிள்ளை வீட்டுக்கு வந்து கடப்புத் தடிகளை கழற்றிவிட்டு உள்ளே வந்தபோது முருகேசரும் பெருமாளும் மாமரத்தின் கீழ் அமர்ந்திருந்தனர்.

முருகேசர், "எங்கயடா தம்பி.. இவ்வளவு நேரமும் போனனீ...? கொம்மா என்னவோ ஏதோவெண்டு தவிச்சுக்கொண்டு நிக்கிறா", என்றார்.

சத்தம் கேட்டு கிணற்றடியில் நின்ற பார்வதி ஓடாத குறையாக அங்கு வந்து சேர்ந்தாள்.



"எங்கையப்பு போனனீ? சிவத்தைச் சண்டையிலை விட்டிட்டு என்ன நேரம் எது நடக்குமோ எண்டு கலங்கிக் கொண்டு நிக்கிறம். உன்னையும் காணேல்லயெண்டால் என்ன பாடுபடுவம் எண்டு உனக்கு விளங்காதே?"

இரு கன்னங்களையும் கைகளால் தடவியபடி கேட்ட பார்வதியின் குரல் தளதளத்தது. தாயின் தவிப்பு அவன் மனதில் ஏற்படுத்தி வைத்த முடிவை ஒரு முறை உலுப்பத் தவறவில்லை. "பின்னேரக் கையிலை கல்விளான் பக்கம் யானை நடமாட்டம் கூடவெண்டு செல்வராஜா மாமாதான் நிண்டு இண்டைக்குப் போகச் சொன்னவர்", எனச் சொல்லிச் சமாளித்தான் சுந்தரம்.

"சரி..சரி..கையைக்காலைக் கழுவிப்போட்டு சாப்பிட வா", என்றாள் அவள்.

"நான் இயக்கப் பொடியளோட சாப்பிட்டனாணெணை. முதல் களை தீரக் குளிச்சுப் போட்டு வாறன்", என்றவாறே கிணற்றடியை நோக்கி நடந்தான். அவன் கிணற்றடிக்கு அவசரமாய்ப் போன காரணம் குளிப்பதை விட அங்கு நின்று தன்னை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்த முத்தம்மாவைச் சந்திக்க என்பதை பார்வதி உணரவில்லை.

முத்தம்மா ஒரு விதமான பொய்க் கோபத்துடன் கேட்டாள், "போனால் போன இடம். வந்தால் வந்த இடம். வீட்டிலை இருக்கிறவை என்ன பாடுபடுவினம் எண்ட எண்ணமே இல்லை"

"நீ... நீங்கள் பாடுபடுறதைப் பற்றி மட்டும் யோசிக்கிறாய்.. றோட்டிலை போய் பார். சனம் என்ன பாடுபடுதெண்டு", எனக் கேட்டான் சுந்தரம்.

"அந்தப் பாடு எங்களுக்கில்லையே. நாங்களும் இடம் பெயர்ந்த ஆக்கள்தானே? நாங்கள் என்ன செய்ய ஏலும்?"

சில வினாடிகள் மௌனத்தின் பின் அவன், "ஒருதருமே இடம் பெயராத நிலை வரவேணும்"

"நீங்கள் என்ன சொல்லுறியள்?", குழப்பத்துடன் கேட்டாள் முத்தம்மா.

"ஒண்டுமில்லை. குளிக்கப் போறன், போய் துவாயை எடுத்துக் கொண்டு வா", என்றான் அவன்.

அவள் ஒரு மெல்லிய புன்னகையுடன் "உதெல்லாம் செய்ய நான் என்ன உங்கடை பொண்டாட்டியோ?" எனக் கேட்டாள்.

"ம், பொண்டாட்டிதான். இப்ப இல்லை.. வலு கெதியிலை", என்றான் அவன்.

முத்தம்மாவின் முகம் திடீரெனச் சிவந்து போக அவள் ஒரு இனம் புரியாத குதூகலத்துடன் துவாய் காயப்போடப்பட்டிருந்த கொடியை நோக்கி நடந்தாள். அவளை மனைவியாக்கியதும் அடுத்து அவன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் நடவடிக்கை பற்றி அவள் அறிந்திருந்தால் அவள் அப்படிச் சந்தோசப்பட்டிருக்க முடியாது. குளித்துவிட்டு வந்ததும் சுந்தரத்துக்கு மீண்டும் பசியெடுக்க ஆரம்பித்துவிட்டது. அவன் தாயிடம் சோறு போடும்படி கேட்டான். பார்வதி ஒரு தட்டில் நெல்லுப் பச்சை அரிசிச் சோறும் போட்டு வெண்டிக்காய்க் குழம்பும் கத்திரிக்காய் பால்கறியும் விட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள். ஒவ்வொரு பிடி சோறும் அவன் நாவுக்கு சுவையேறிய போது போராளிகளின் சாப்பாடு நினைவுக்கு வந்தது.

சுடச் சுடச் சோற்றையும், பெரு அவியலாய் காய்ச்சிய கறியையும் பொலித்தீன் பையில் போட்டுக் கட்டப்பட்டு அது பல மணி நேரத்தின் பின் அவர்கள் கைக்குக் கிடைக்கும். ஒரு பையில் இருவருக்கான சாப்பாடு இருக்கும். அதை அவிழ்க்கும் போது வெறும் களியாகத்தான் வெந்து போய்க்காணப்படும். சில சமயங்களில் அது பழுதடைந்தும் போய்விடும். களமுனைப் போராளிகள் அதைப் பற்றியெல்லாம் பெரிதாக அக்கறைப்படுவதில்லை. சாப்பாடு என்ன நிலையிலிருந்தாலும் அள்ளி வாயில் போட்டுவிட்டு எதிரியை முகம் கொள்வது பற்றியே அவர்களின் சிந்தனை மேலோங்கியிருக்கும். தனது அண்ணன் சிவமும் அப்படியான உணவுடன்தான் களமாடிக் கொண்டிருக்கிறான் என்பதை நினைத்த போது அவனால் மேற்கொண்டு சாப்பிட முடியவில்லை.

அவன் தட்டை தாயிடம் நீட்டியவாறு, "போதுமெணை", எனச் சொன்னான்.

"ஒரு கொஞ்சம்... கொஞ்சம் சாப்பிடு மோனை கன தூரம் சைக்கிள் ஓடினனீ", எனக் கூறினாள் பார்வதி.

பல நாட்கள் தொடர்ந்து பசி தாகத்தைப் பொருட்படுத்தாது சண்டையிட்டுக் கொண்டிருக்கும் தன் தமையனுக்கும், "ஒரு கொஞ்சம் இன்னும் ஒரு கொஞ்சம்", என உணவு கொடுப்பவர்கள் யார் என நினைத்த போது, ஏக்கம் அவன் நெஞ்சை நிறைத்துக் கொண்டது.

"போதுமணை", என்றவாறே தட்டைத் தாயிடம் கொடுத்துவிட்டு அவன் எழுந்து போய்க் கையைக் கழுவினான். தான் தன் தமையனை நினைத்துக் கொண்டதை தாயிடம் சொன்னால் அவளின் நிலைமை என்னவாகும் என்பதை அவன் நன்றாகவே தெரிந்திருந்தபடியால் மனதை அடக்கிக் கொண்டு அப்பால் போனான். சிறிது நேரத்தில் வெளியே போயிருந்த பரமசிவமும், முருகரப்புவும் அங்கு வந்து சேர்ந்தனர். சுந்தரம் சவாரி செல்வராஜாவின் நிலைமையை ஒன்றும்விடாமல் சொன்னான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# எம்.டி.வாசுதேவன் நாயரின் 'இரண்டாம் இடம்'

■ புதிய மாதவி

எம்.டி.வாசுதேவன் நாயரின் மலையாள நாவலான 'இரண்டாம் இடம்' குறிஞ்சிவேலனின் தமிழ் மொழியாக்கத்தில் சாகித்திய அக்கடமி வெளியீடாக வந்துள்ளது. தலைமைக்குத் தகுதியான வீரம், காதல் இரண்டும் அளவுக்கு அதிகமாகவே கொண்டிருந்த மகாபாரதக் கதையின் பீமன் எப்போதும் இரண்டாம் இடத்தில் இருக்கிறான். அவன் தான் வாசுதேவன் நாயரின் மகாபாரதக்கதையை இரண்டாம் இடத்தின் பார்வையில் நின்று கொண்டு பார்க்கிறான். காலமெல்லாம் தர்மம், மனு சாத்திரம், முன்னோர் சொன்னது,அரசு சட்டம், வழக்கம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் தலைமைப்பீடத்தை அவனுடைய இரண்டாம் இடம் கேள்விக்குரியதாக்குகிறது.

அர்ச்சுனன் சுயம்வரத்தில் வென்றெடுத்தவள் பாஞ்சாலி என்று அர்ச்சுனனுடன் மட்டுமே சம்பந்தப்படுத்திப் பேசப்படுகிறாள் பாஞ்சாலி. ஆனால் சுயம்வரத்தில் வென்றவளைப் பத்திரமாக காப்பாற்றி எதிர்த்தவர்களை எல்லாம் ஓடச்செய்தவன் பீமன். அந்தவகையில் பார்த்தால் பாஞ்சாலி பீமனுக்குரியவளாகிறாள். ஆனால் எப்போதும் அப்படிப் பேசப்படுவதில்லை. யுத்தத்தில் பகைவர்களை வென்றவனுக்கே அரசுரிமை என்பது வழக்கம். அப்படிப்பார்த்தால் குருசேத்திரத்தில் பகைவர்களான துரியோதனன், துச்சாதனனை வென்றவன் பீமன். அரசுரிமை அவனுக்குத்தான் உரியது என்று தருமனும் சொல்ல ஒரு கணநேரம் அரசனாகும் கனவுகளில் மிதக்கும் பீமனை பாஞ்சாலி தன் தலைமையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சந்திக்கிறாள். பீமன் அரசன் ஆனால் அவனுடைய மனைவி




பலந்தரை அரசியாவாள். தன்னுடைய இடம் 'இரண்டாம் இடமாகி'விடும் என்று அச்சப்படுகிறாள் அவள்.

போர்க்களத்தில் அபிமன்யு மாண்ட செய்தி கேட்டு கிருஷ்ணனின் முகம் கறுத்துவிடுகிறது. அவன் உபதேசம் செய்த கீதையின் சாயம் வெளுத்து விடுகிறது பீமனின் பார்வையில். 'கிருஷ்ணனின் கறுத்த முகத்தைக் கண்டேன், சொந்த இரத்தமென்றும் குடும்பம் என்றும் வரும்போது தான் நைந்த ஆடைகளின் உவமையை மறந்துவிடுகிறோம்' என்கிறான் பீமன். பீமனின் மகன் கடோத்கஜன் போரில் இறந்துவிடுகிறான். கர்ணன் அர்ச்சுனனுக்கு எதிராக இறுதியில் பயன்படுத்த வைத்திருந்த வேலைப் பயன்படுத்தியே கடோத்கஜனைக் கொல்ல முடிந்தது.

எனவே அர்ச்சுனன் தப்பித்துக் கொண்டான் என்பதற்காக பாண்டவர்கள் கொண்டாட வேண்டும் என்று கிருஷ்ணன் பாண்டவர்களிடம் சொல்கிறான். திட்டமிட்டே தன் மகன் கடோத்கஜன் அன்றைய போரில் முன் வரிசையில் அனுப்பப்பட்டதை அறிகிறான் பீமன். (18ஆம் பக்கம் பார்க்க)

---



புறக்கணிக்கப்பட்ட நேசமொன்று
இரவின் தனிமையுடுத்தி
யாரும் காணாதவாறு
தன்னை மறைத்துக்கொள்கிறது

யாரேனும் அழைக்கக்கூடுமென
கொஞ்ச நேரம் அது
தாமதித்திருக்கிறது
பின் தனைத் தேற்றியபடி
கண்ணீரோடு அது
இருளுக்குள் கரைகின்றது

அந்தோ..
இரவுக்குள் மறைந்திருக்கின்றன
காலங்காலமாய் புறக்கணிக்கப்பட்ட
எத்தனையோ நேசக்கூட்டங்கள்

அன்பே !
நீ கேட்கிறாய்
எப்படி இந்த இரவு
இத்தனை இருளாய் இருக்கிறதென..
எதனால் இவ்விரவின் பேரமைதியில்
அப்படி நாம் உறைந்து போகிறோமென..
ஏன் இந்த இரவினை
நம்மால் கடக்கவே முடியாதிருக்கிறதென..

இவ்விரவுகளின் மேல் படிந்திருப்பதோ
புறக்கணிக்கப்பட்ட நம் நேசங்களின்
தீராச் சாபங்களென
உனக்குரைத்திடும்
வழியறியாமல்..
இரவின் ஆழங்களுக்குள்
மௌனமாய் திரும்பிக்கொண்டிருக்கிறேன்
நான்.

- ரிஸ்கா முக்தார்

# வித்தியாசம்

சாரு நிவேதிதா

எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின் 'சஞ்சாரம்' நாவலுக்கு சாஹித்திய அக்கடமி விருது கிடைத்ததையிட்டு அவருக்கான பாராட்டு விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது. அந்த நிகழ்ச்சியில் ஒரே ஒரு விஷயம்தான் மனசுக்குச் சங்கடமாக இருந்தது. நிகழ்ச்சி தொடங்கிய பின் சற்றே தாமதமாக வந்தார் நடிகர் சிவகுமார். ஏற்கனவே தாமதமாக வருவேன் என்று சொல்லியும் இருந்தார். எனவே அதில் ஒன்றும் பிரச்சினையே இல்லை. வருவதுதான் சிறப்பே தவிர தாமதமாக வருவதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் அவர் மேடை ஏறிய சமயத்தில் மேடையில் இருந்த எட்டு, பத்து பேரும் அட்டேன்ஷனில் எழுந்து நின்றதுதான் எனக்குப் பெரும் வருத்தத்தை அளித்தது. சிவகுமார் மீது எந்தத் தவறும் இல்லை. அவர் ஒன்றும் இது போன்ற அனாவசியமான மரியாதைகளை எதிர்பார்ப்பவரும் அல்ல. எதிர்பார்ப்பவராக இருந்தால் என்னைப் போன்ற ஒரு எழுத்தாளனின் வீட்டுக்கு ஓடி ஓடி வரக் கூடியவராக இருக்க மாட்டார்.

நான் சொல்ல வருவது, தமிழர்களின்




மனநிலையை மட்டுமே. அவர் வந்ததும் என்னைத் தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்றனர். அதைப் பார்வையாளர்கள் அத்தனை பேரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். நான் எழுந்து நிற்கவில்லை. அவர் என்னருகே வந்த போதுதான் எழுந்து நின்று கை கொடுத்தேன். சா. கந்தசாமி மிகவும் மூத்தவர். மற்றவர்கள் எழுந்து நின்றதால் அவரும் எழ வேண்டியதாயிற்றுப் போலும்.யோசித்துப் பாருங்கள். இதே மேடை. இதே போல் சா. கந்தசாமி தாமதமாக வந்து மேடை ஏறுகிறார். அப்போது இந்தப் பத்து பேரும் எழுந்து நிற்பார்களா? அதாவது, சினிமா பிரமுகர் என்றால் மட்டும் நாம் கிட்டத்தட்ட கடவுள் மாதிரி நினைக்கத் தலைப்படுகிறோம்.

1995ஆம் ஆண்டு. கேரளத்தில் ஒரு எழுத்தாளருக்கு ஞான பீடப் பரிசு கிடைத்துள்ளது. அவர் அங்கே ஒரு சூப்பர் ஸ்டார். மம்முட்டி, மோகன் லாலை விடப் பிரபலம் ஆனவர். அதனால் அவர் வீட்டுக்கு வெளியே அவருக்குப் பூச்செண்டு கொடுக்கவும் மிட்டாய் கொடுக்கவும் ஒரு பெரிய வரிசை. அந்த வரிசையில் நிற்கும் ஒருவரைப் பார்த்து சார், நீங்க போய் முன்னால நில்லுங்க போங்க போங்க என்கிறார்கள். அவரோ வேண்டாம் வேண்டாம் நான் வரிசையிலேயே நின்று போய்ப் பார்க்கிறேன் என்றார்.

அப்படி நின்றவர் அப்போது கேரளத்தின் முதல்வராக இருந்த ஈ.கே. நாயனார். அவர் தான் கேரளத்தில் அதிக ஆண்டுகள் முதல்வராக இருந்தவர். ஞானபீடம் பெற்றவர் எம்.டி. வாசுதேவன் நாயர். தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்குமான வித்தியாசம் இது. இதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



# ஒரு விரல் புரட்சியும் அரசியல் குழப்பமும்

## பின்பற்றக்கூடாத முன்னுதாரணம்

ஒரு திருவிழா நடந்து ஓய்ந்ததுபோல முடிந்திருக்கிறது இலங்கை அரசியல் நாடகம். அதை நாடகம் என்று சொல்வதுதான் அதிக பொருத்தம். ஏனெனில் நாடகங்களிலேயே வேடங்கள் நிரந்தரமாக இருப்பதில்லை. பாத்திரங்களுக்கு ஏற்றவாறு உடை அணிந்து, அலங்கரித்து, எழுதியவற்றை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது. அங்கு கேட்கின்ற குரல் மட்டும் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டவருக்கு உரியதாக மட்டும் இருக்குமே ஒழிய கருத்துப் பிறருடையதாக இருக்கும். அவை யாரோ ஒருவர் எழுதிக் கொடுத்ததாக இருக்கும். அப்படித்தான் இலங்கை அரசியலிலும் நடந்திருக்கிறார் மைத்திரி.


உலகில் நடைபெற்ற பெரும்பாலான புரட்சிகளில் சிறந்ததெனக் கருதப்பட்டவற்றிற்குப் பின்னால் ஒரு சமூக நன்மை அல்லது மேம்பாடு இருந்திருக்[illegible]து. இங்கையில் 2015 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலை அப்படியானதென முற்று முழுதாகச் சொல்லாவிட்டாலும், பெரும்பாலும் அது ஒரு ஜனநாயகப் புரட்சியே!

அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த குடும்ப ஆட்சிக்கு, ஒரு குழுவின் அட்டகாசத்துக்கு, ஒரு சில குறிப்பிட்ட மனிதர்களின் வணிக நோக்கமாக இருந்த அரசியல் நிலைமைகளை மாற்றி முற்று முழுதாக ஒரு புதுத் தலைவர் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். எவரும் எதிர்பார்த்திராதவாறு நடந்த மாற்றம் அது என்று எல்லோராலும் பேசப்பட்டது. மைத்திரி இலங்கையில் நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தி நாட்டை ஒரு சுமூகமான அமைதி வெளிக்கு எடுத்துச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடந்ததோ வேறு...

எவரை நல்ல மனிதர் என்று இலங்கைச் சிறுபான்மை இனத்தவர்கள் எண்ணினார்களோ... எவரைத் தமக்கென ஒரு சுபீட்சத்தைத் தேடித் தரக்கூடியவர் எனச் சிறுபான்மை இனத்தவர் எண்ணிச் சந்தோசப்பட்டனரோ... அவரே காலப்போக்கில் நஞ்சுண்டகண்டனாக மாறினார் அல்லது மாற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். மிகவும் கேவலமான இனத்துவேஷக் கலாசாரத்தை ஏற்படுத்தும் விதத்தில் தனது உரையை நிகழ்த்தினார்.

ரணில் என்ற ஒரு தனிமனிதனைப் பிடிக்கவில்லை... அவரோடு கருத்து வேறுபாடு தோன்றிவிட்டது என்பதற்காக - தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள சிங்களப் பேரினவாதிகளைச் சாந்தப்படுத்த அவர் இனவாதத்தைக் கக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதுதான் வேதனையான விடயம். கடைசியில் ஒரு பிரளயத்தை இலங்கை அரசியலில் ஏற்படுத்தி, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தான் வந்த வழியை மறந்து, தன்னை இந்த நிலைக்கு உயர்த்தியவர்களை எல்லாம் காட்டிக் கொடுத்துவிட்டு, தன்னை நம்பிய அரசியல்வாதிகள், அதிகாரிகள், பொதுமக்கள் எல்லோரையும் நட்டாற்றில் விட்டுவிட்டுத் தான் ஏன் வந்தேன்? என்றதை மறந்து தனக்கு எதிரியாக எண்ணியவரது காலில் வீழ்ந்து சரணடைவதென்பது...

இனி வருங்காலத்தில் இலங்கை அரசியல் வரலாற்றில் இது போன்றதொரு கேவலம் நடந்து விடக்கூடாது. உலக நாடுகள் ஒன்றிணைந்து அடிக்கு மேல் அடித்து அடித்து தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையைக் கொண்டு வந்திருக்கின்றனர்.



கடந்த 52 நாட்களுள் ஏற்பட்ட குழப்ப நிலையின்போது சர்வதேச சமூகம் நடந்து கொண்டதை நல்லதொரு முன்னூதாரணமாகக் கொள்ளலாம்.

ஆனால் இதே சர்வதேச சமூகமே "இறுதிப் போர் அவலத்தின்போது, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின்போது மௌனமாக இருந்தது. பல லட்சம் தமிழ் மக்கள் நீதியற்ற முறையில் இனப்படுகொலை செய்யப்பட்டபோது பாராதிருந்தது. ஆனால் மைத்திரியால் இந்த நிலை ஏற்படுத்தப்பட்டபோது மட்டும் கிளர்ந்தெழுந்திருக்கிறது." இதுவும் கவனிக்கப்பட வேண்டிய முன்னுதாரணம் எனலாம்.

அதேவேளை இப்படியான சந்தர்ப்பங்களில் உடன் கட்சி தாவுகிறவர்கள் சிலர் உண்டு. ஆனால் அவர்களும் இந்தத் தடவை அப்படி நடந்து கொள்ளவில்லை. பொறுமை காத்திருக்கின்றனர். அதுவும் ஒரு அரசியல் இலாபமே. அரசியலை முற்று முழுதாக விளங்கிக் கொள்ளாத ஞானசூனியங்கள் இரண்டு கட்சி தாவி மக்கள் நலன்களைவிடப் பணத்துக்குத் தாங்கள் அடிமைகள் என்ற நிலையை எடுத்துக்காட்டி உள்ளனர். இதுவும் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டிய விடயம்.

இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணகர்த்தாக்கள் என்று வர்ணிக்கப்படுபவர்கள், தம்மை முன்னிலைப்படுத்தி இருக்கிற தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அசைவுகள் உன்னிப்பதாகக் கவனிக்கப்பட வேண்டியவை. அவர்கள் அந்தச் சூழ்நிலைகளில் நடந்கொண்டவை பற்றி ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியவை. இனி இந்தச் சூழ்நிலையில் எப்படிக் காய்களை நகர்த்தப்போகிறார்கள் என்பது பற்றியும் நாம் கரிசனை கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். கடந்த காலங்களில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும், அவற்றிற்கு நேர்ந்த கதி என்ன என்பதுவும் முன்னுதாரணமகக் கொள்ளப்பட வேண்டியவை.


பாடத்தைப் படித்து முடித்துவிட்டோம். இனிமேல்தான் பரீட்சை எழுதப்போகிறோம். பார்க்கலாம் பெறுபேறுகள் என்ன வென்பதை? ஆனால் இதுவும் ஒரு கொள்ளப்படக் கூடாத முன்னுதாரணமாக இருக்கக் கூடாது என்று அவரவர் தமது இறைகளை வேண்டிக் கொள்வோமாக.



அஜித்தின் புதிய பட அறிவிப்புகள் அடுத்தடுத்து வெளியானது. இதனால் அவரின் ரசிகர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியில் உள்ளனர்.

‘விஸ்வாசம்’ படம் பொங்கலுக்கு வெளியாகிறது. இந்நிலையில் அஜித்தின் 59 ஆவது படமாக ‘பிங்க்’ மீளுருவாக்கப் படம் அமைகிறது.

அஜித்தின் 60 ஆவது படத்தையும் போனி கபூரே தயாரிக்கிறார். ‘அஜித் 59’ மே முதலாம் திகதியும், ‘அஜித் 60’ ஏப்ரல் 2020 இலும் வெளியாகும்.




இயக்குநர் கௌதம் கிருஷ்ணா இயக்கத்தில் தன்ஷிகா நடிக்கும் புதிய படத்தின் பெயர் ‘யோகிடா’.

சண்டை, திகில் கதையாக உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. ஏ.ஆர். ரஹ்மானின் சகோதரி இஸ்ரத் காத்ரி இப்படத்துக்கு இசையமைக்கிறார்.

தெலுங்கில் உருவாகும் ‘சைரா நரசிம்ம ரெட்டி’ படத்தின் படப்பிடிப்பு மைசூரில் நடக்கவுள்ளது. மைசூர் அரண்மனையில் முக்கியக் காட்சி ஒன்றை பிரமாண்டமாக எடுக்கத் திட்டமிட்டுள்ளனராம்.





‘மோ’ பட இயக்குநர் புவன் நல்லான் இயக்கத்தில் நகைச்சுவை, திகில் கதையாக உருவாகும் புதிய படத்தின் பெயர் ‘ஜாம்பி’. இதில் யாஷிகா ஆனந்த், யோகி பாபுநடிக்கின்றனர்.

விஜய் சேதுபதி - த்ரிஷா நடிப்பில் உருவாகி பெரு வெற்றி பெற்ற ‘96’ படத்தின் கன்னடத்தில் மீள உருவாகின்றது. இதில் பாவனா நாயகியாக நடிக்கவுள்ளார். படத்துக்குப் பெயர் ‘99’.

# நியமனம்




சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளனத்தின் (IAAF) புதிய நிறைவேற்று அதிகாரியாக பிரித்தானியாவின் முன்னாள் தடை தாண்டல் ஓட்ட வீரரான ஜொனதன் றிட்ஜியோன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரியாக விளங்கிய பிரான்ஸின் ஒலிவியர் கொ்ஸ் வணிக ரீதியான சில முரண்பாடுகளால் அப்பதவியை கடந்த மார்ச் மாதம் ராஜினாமா செய்திருந்தார். இதையடுத்தே கடந்த வாரம் மொனாகோவில் நடைபெற்ற கூட்டத்தில் ஜொனதன் றிட்ஜியோன் புதிய நிறைவேற்று அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 1984 - 1996 வரையான காலப் பகுதியில் 110 மீற்றர், 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றியவர். 1988, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பிரித்தானியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவர் கலந்துகொண்டாலும் அவரால் பதக்கங்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் தொடரில் வெள்ளிப்பதக்கம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் கூட்டணி




அவுஸ்ரேலிய முன்னாள் ரென்னிஸ் வீரரான றொட்னி லேவர் பெயரில் நடைபெற்று வரும் தொடர்தான் லேவர் கிண்ண ஆடவர் ரென்னிஸ் போட்டிகள். ஐரோப்பிய அணிக்கும் ரெஸ்ட் ஒவ் த வேர்ட் அணிக்கும் இடையில் இத்தொடர் நடைபெற்று வருகின்றது. 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடரில் இரண்டு தடவைகளும் ஐரோப்பிய அணியே வெற்றி பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தொடரில் ஐரோப்பிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரோஜர் பெடரர், ரபெல் நடால் உள்ளிட்ட ஆறு வீரர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

இத்தொடரில் நடைபெற்ற ஒரு இரட்டையர் போட்டியில் பெடரரும் நடாலும் இணைந்து விளையாடியமை ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந் திருந்தது. ஆனாலும் இவ்வருடம் நடை பெற்ற லேவர் கிண்ணப் போட்டியில் நடால் காயம் காரணமாக விலகியமை ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. இந்நிலையில் அடுத்த வருடம் ஜெனீவா வில் நடைபெறவுள்ள லேவர் கிண்ணப் போட்டிகளில் இருவரும் மறுபடியும் இணைந்து இரட்டையர் போட்டியில் களமிறங்கப் போகின்றனர் எனக் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# திரைப்படம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான சௌரவ் கங்குலியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக விரைவில் வெளிவரவுள் ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் அவரது சுயசரிதையான A Century is not enough என்ற நூல் வெளிவந்திருந்தது. அதனை மையப்படுத் தியே திரைப்படம் உருவாக்கப்படவுள்ளது. கங்குலி ஒரு தடவை தனது வாழ்க்கை வரலாறு திரைப்படமாக வெளிவருமாக இருந்தால் அதனை பெங்காலித் திரைப்பட இயக்குநர் ஒருவரே இயக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்த வகையில் இந்தத் திரைப் படத்தை பெங்காலித் திரைப்பட இயக்கு நரான ஸ்ரீஜித் முகர்ஜி இயக்கவுள்ளார் எனத் தற்போது செய்திகள் வெளி வந்துள்ளன. ஆனாலும் அவர் தற்போது இரண்டு படங்களை இயக்கி வருவதால் அவை வெளிவந்த பின்னரே கங்குலியின் திரைப்படம் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரலாம் எனக் கருதப்படுகின்றது.




# வாழ்த்து



அவுஸ்ரேலியாவினால் விதிக்கப்பட்டமை நாம் அறிந்ததுதான்.

இந்த வருடம் மார்ச் மாதம் கேப்டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய வீரர்களான ஸ்ரீவ் ஸ்மித், டேவிட் வோணர், கமரூன் பாங்குறொவ்ற் ஆகியோர் பந்தைச் சேதப்படுத்தியதால் ஸ்மித் மற்றும் வோண ருக்கு ஒரு வருடத் தடையும் பாங்குறொவ் ருக்கு 9 மாத காலத் தடையும் கிரிக்கெட்

இதில் பாங்குறொவ்றின் தடை எதிர்வரும் டிசெம்பர் 29 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. அவருக்கு உடனடியாக அவுஸ்ரேலிய அணியில் வாய்ப்புக் கிடைக்குமா என்பது கேள்விக் குறியானாலும் நடைபெற்று முடிந்த இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போர்த் டெஸ்ட்போட்டி தொடங்குவதற்கு முதல்நாள் மைதானத்திற்கு வருகை தந்த பாங்குறொவ்ற் அவுஸ்ரேலிய வீரர்களைச் சந்தித்து கலந்துரையாடி உள்ளார். அதன்போது அவருக்கு விதிக்கப்பட்ட தடை முடிவதை அறிந்த வீரர்கள் மீண்டும் அவரது கிரிக்கெட் பயணம் வெற்றிகரமாக அமைவதற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்கள்.

# ஒளிவிழா

கடந்த வாரம் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற கிறிஸ்மஸ் தின ஒளிவிழாவில் இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் தலைவரான வெய்ன் ரூனி கலந்து கொண்டுள்ளார். மன்செஸ்ரர் யுனைற்றட், எவர்றன் கழகங்களுக்காக விளையாடிய ரூனி கடந்த ஜூலை மாதம் தொடக்கம் அமெரிக்க கழகமான டி.சி.யுனைற்றட்டுக்காக விளையாடி வருகின்றார். அதேசமயம் டி.சி. யுனைற்றட்டின் இளையோர் அணியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகன் பரோன் மத்திய கள வீரராக விளையாடி வருகின்றார்.

பரோன், டி.சி.யுனைற்றட்டினதும் ரூனியினதும் தீவிர ரசிகராவார். அவரது தனிப்பட்ட அழைப்பின் பெயரிலேயே ரூனியும் அவரது மனைவியும் நான்கு மகன்களும் கலந்து கொண்டுள்ளனர். வழமையாகப் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்து வரும் பரோன் தனது ஆதர்ஸ நாயகனான ரூனியை நேரடியாகச் சந்திப்பதற்காகவே ஒளிவிழாவில் கலந்து கொண்டுள்ளார். இந்த விழாவில் டொனால்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா, மருமகள் வனேசா ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.



# சாத்தியப்படுமா?

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் தற்போது 32 நாடுகளே பங்கு பற்றி வருகின்றன. ஆனாலும் 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இருந்து 48 நாடுகள் பங்குபற்றுமென பிபா ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனா லும் 2022 ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறும் உதைபந்தாட்டத் தொடரி லேயே 48 நாடுகள் பங்குபற்றும் முடிவுக்கு பல அங்கத்துவ நாடுகளின் ஆதரவு இருப்பதாக பிபா தலைவரான கியானி இன்பென்ரினோ கடந்த வாரம் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமை கட்டாருக்கு 2010 ஆம் ஆண்டு கிடைத்ததற்குப் பிற்பாடு கட்டார் 32 நாடுகள் பங்குபற்றும் விதமான கட்டமைப்பு வசதிகளையே மேற்கொண்டு வந்துள்ளது. இந்நிலையில் 48 நாடுகள் பங்குபற்றும் உலகக் கிண்ணத் தொடரை தனியே கட்டாரால் நடத்த முடியுமா என்பது சந்தேகமே. ஆனாலும் பிபா அண்டைநாடுகள் சிலவற்றின் ஒத்துழைப்போடு அதனைச் சாத்தியப்படுத்த லாம் என்று நம்புகின்றது. எதுஎப்பியோ அடுத்தாண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள பிபா கூட்டத் தொடரில் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனக்கருதப்படுகின்றது.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 22.12.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.